# தேசிய பிரச்னைகளுக்குத் தீர்வுகாண அரசு, புதிய சட்டவாக்கத்தை பாராளுமன்றில் சமர்ப்பிக்கும்

## — ஜனாதிபதி

(கொழும்பு)

தேசியப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பது சம்பந்தமாக அரசாங்கம் பிரத்தியேச் சட்வாக்கம் ஒன்றை, விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க இருப்பதாக அரசாங்கப் பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு உரையாற்றுகையில் கூறியதாவது;

''நாடு எதிர்நோக்கும் எந்தப் பிரச்சனை சம்பந்தமாகவும் அரசு எதுவித இரகசிய ஒப்பந்தமும் இதுவரையில் செய்யவில்லை.''

''தேசியப் பிரச்சனைகள் சம்பந்தமாகத் தன்னிச்சையாகவோ அல்லது இரு தரப்புப் பேச்சுவார்த்தையாலோ பிரச்

(8ம் பக்கம் பார்க்க)

ருவவெளியீட்டுப்பகுதி
ாழ்ப்பாண பொதுநூலகம்

விலை ரூபா 3-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 | சித்திரை: 12 | றம்ழான் பிறை: 28 | இதழ்: 72

யாழ்ப்பாணம் | புதன்கிழமை | 25-04-1990

## யாழ்ப்பாணம் தற்போது சுமுகநிலைக்குத் திரும்பியுள்ளது

### ஜெனரல் நளின்

(திருமலை)

யாழ்ப்பாணம் தற்போது முற்றாக சுமுகநிலையடைந்துள்ளது. வெளிமாவட்டத்தவர்கள் அங்கு எதுவித தடங்கலுமின்றி சென்று வரக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளதாக வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் லெப். ஜெனரல் நளின் செனிவிரத்ன தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு அண்மையில் விஜயம் செய்து திருமலை திரும்பியுள்ள ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

(8-ம் பக்கம் பார்க்க)

★ யாழ். மத்திய தொலைபேசிநிலையத்துக்கு

# நவீன 'கொன்ரெயினர்' பரிவர்த்தனை சாதனம்

# ஜூலை மாதத்தில் கிடைக்கும்!

## நேரடித் தொடர்பு கொள்ள 500 இணைப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

**தொலைதொடர்புத் திணைக்களத்தைச் சேர்ந்த யாழ்ப்பாணம் மத்திய தொலைபேசிப் பரிவர்த்தனை நிலையத்திற்கு 500 தொலைபேசி இணைப்புகள்கொண்ட நவீன 'கொன்ரெயினர்' பரிவர்த்தனை ஜூலை மாதமளவில் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.**

யாழ்ப்பாணத்தில் இப்பொழுது 100 தொலைபேசி இணைப்புக்கள் கொண்ட பிரத்தியேக தன்னியக்க தொலைபேசி பரிவர்த்தனை நிலையம் இயங்குவது குறிப்பிடத்தக்கது.

இதனுடன் அநுராதபுரம் தொலைபேசி பரிவர்த்தனை நிலையம் மூலம் நேரடியாக 24 தொலைபேசி இணைப்புக்கள் இயங்குவதும் குறிப்பிடத்தக்கது.

'கொன்ரெயினர்' பரிவர்த்தனை தொலைபேசி இயந்திரம் விரைவில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு கொண்டு வரப்படவிருப்பதாகவும் தெரிய வருகிறது.

1987 மார்ச் மாதத்திற்கு முன்னர் யாழ்ப்பாணம் தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்தில் 2500 தொலைபேசி சந்தாதாரர்கள் இருந்தது குறிப்பிடத்தக்கது. (153)

## பயிலுநர் ஆசிரியர் தெரிவு விரைவில் பூர்த்தியடையும்

(கொழும்பு)

வடக்கு–கிழக்கு மாகாண பயிலுநர் ஆசிரியர் தெரிவில், சகல சமூகத்தினருக்கும் உரிய முக்கியத்துவம் அளித்து நியமனம் வழங்கப்பட்டவர்களில் 80 வீதமானோருக்கு பதவி நியமனக் கடிதங்கள் அனுப்பப் பட்டுவிட்டனவென்றும், ஏனையோருக்கு விரைவில் பதவி நியமனங்கள் வழங்கப்படுமென்றும் கல்விச் சேவை ஆணைக் குழுத் தலைவர் திரு ஜோர்ஜ் மெண்டிஸ் அறிவித்துள்ளார்.

வடக்கு–கிழக்கு மாகாண சபை முன்னாள் முதலமைச்சர் மேற்படி ஆசிரியர்கள் தெரிவு சம்பந்தமாக உரிய ஒத்துழைப்பு வழங்கத் தவறியமையினாலேயே பதவி நியமனங்கள் வழங்குவதில் கால

(8-ம் பக்கம் பார்க்க)

## மோட்டார் சைக்கிள் விபத்து அதிகரிப்பு!

## நேற்று மட்டும் பலர்காயம்!!

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் மோட்டார் சைக்கிள் விபத்துக்கள் அதிகரித்து வருவதாக புகார் செய்யப்பட்டுள்ளது.

நாளொன்றிற்கு பத்து மோட்டார் சைக்கிள் விபத்துக்கள் ஏற்பட்டுவருவதாகவும் கணிப்பிடப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை, வரணி, ஈச்சமோட்டை, அரியாலை, மானிப்பாய், ஒட்டுமடம்சந்தி ஆகிய பகுதிகளில் நேற்று இடம்பெற்ற விபத்துக்களில் சிறுவர்கள் உட்பட பலர் காயமடைந்துள்ளனர்.

மானிப்பாயில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் செ. செந்தூர் வயது 13) என்ற சிறுவன் காயமடைந்துள்ளார்.

ஊர்காவற்றுறையில் இடம்பெற்ற விபத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சி. சுரேஷ் (வயது 7) என்ற சிறுவன் காயமடைந்தார்.

அரியாலைப் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் அரியாலை பூமகள் வீதியைச் சேர்ந்த வரதராசா

(8ம் பக்கம் பார்க்க)

## பரீட்சை

(கொழும்பு)

கல்வியியல் பட்டப்பின் உள்ளகக் கல்வித்தேர்ச்சிப் பயிற்சி நெறியினைப் பின்பற்றுவதற்கெனப் பரீட்சார்த்திகளைத் தெரிவு செய்யும் பரீட்சை அடுத்த மாதம் 12-ம் திகதி நடைபெறவுள்ளது.

# மனிதாபிமானத்துடன் உங்களை விடுதலை செய்கிறோம்

## இந்திய மீனவர்களை விடுவித்த வைபவத்தில் லக்ஷ்மன்

(மன்னார்)

''மனிதாபிமானத்துடன் இன்று உங்கள் அனைவரையும் விடுதலைசெய்கிறோம். நீங்கள் இப்படி எல்லைமீறி வருவதால் எமது கடற்றொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். அத்துடன் பேசாலை, தலைமன்னார்ப் பகுதியில் வாழும் மக்கள் கடற்றொழிலையே நம்பியுள்ளனர்''.

இந்தியாவிலிருந்து எல்லை மீறி பேசாலைக் கடலுக்கு 12 படகுகளில் வந்த 57 கடற்றொழிலாளர்களை விடுவிக்கும் போது மன்னார் விடுதலைப் புலிகள் பொறுப்பாளர் திரு.லக்ஷ்மன் இவ்வாறு கூறினார்.

இம்மாதம் 18ம் திகதி விசாரணைக்காக அழைத்துச்செல்லப்பட்ட 57 கடற்றொழிலாளர்களும் 21ம் திகதி நண்பகல் 11 மணிக்கு பேசாலைப் பாடசாலையில்வைத்து விடுதலைப் புலிகளால் விடுதலைசெய்யப் பட்டனர். இப்பாடசாலையில்

(8ம் பக்கம் பார்க்க)

## 70 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகள் கொள்ளை!

(நெல்லியடி)

கரவெட்டி சண்டில்குளப் பகுதியிலுள்ள வீடொன்றில் நள்ளிரவில் புகுந்த கொள்ளையர் கோஷ்டியொன்று அங்கிருந்தசுமார்70ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகளைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவம்பற்றித் தெரிய வருவதாவது:-

வீட்டு உரிமையாளர்கள் ஆழ்ந்த நித்திரையிலிருந்த வேளை ஜன்னல் கம்பியை

(8-ம் பக்கம் பார்க்க

## புனர்வாழ்வு அமைச்சில் அரச அதிபர்கள் மாநாடு

(நமது நிருபர்)

புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சில் நாளை 26-ம் திகதி காலை 25 மாவட்ட அரசாங்க அதிபர்களும் பங்குபற்றும் மாநாடு நடைபெறவிருக்கிறது.

இம்மாநாட்டிற்குப் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் திரு.ஏ.எம்.எஸ். அதிகாரி தலைமைதாங்குவார்.

இதேவேளையில் தேசிய புனர்வாழ்வு, புனரமைப்புக் கூட்டம் நாளை பிற்பகல் செத்சிறிபாயாவில் நிதியமைச்சின் செயலாளர் தலைமையில் நடைபெறவிருக்கிறது. இதிலும் 25 மாவட்ட அரச அதிபர்களும் கலந்துகொள்ள இருக்கிறார்கள். (153)

## பிரிட்டிஷ் தூதுவராலய அதிகாரி நேற்று யாழ்.பல்கலைக்கழகத்துக்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

பிரிட்டிஷ் தூதரகத்தின் மூன்றாவது உயரதிகாரி செல்வி ஜேன் கோர்பீல்ட் நேற்று யாழ். பல்கலைக் கழகத்திற்கு சினிமாப் புரஜெக்டர் ஒன்றையும், சினிமாத் திரையொன்றையும் வழங்கியதன் பின்னர் பல்கலைக் கழகம் முழுவதையும் சுற்றிப் பார்வையிட்டார்.

நேற்று மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கும் சென்று அதன் வேலைத்திட்டங்களையும் அவர் பார்வையிட்டார். யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. பாலசிங்கத்தையும் நேற்றுமாலை சந்தித்தார்-

நேற்றுமுன்தினம் சுண்டிக்

(8ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தேவை

வில்வம்பழம் தேவை. மில்க் வைற், யாழ்ப்பாணம். (ஏ 707)

### தவறிவிட்டது

யாழ். தபால் நிலயத்திற்கும் கன்னியர்மட பாடசாலைக்கும் இடையில் குணரத்தினம் துரைராசன் (இல. 693663113V) என்பவரது தேசிய அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் விலாசத்திற்கு அறிவிக்கவும். சன்மானம் வழங்கப்படும். வ. யோசேவ், 70/3, பழைய பூங்கா வீதி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். (சி 3886)

### கல்வி

பாலராசிரியர் சங்கம் நடாத்தும் பாலராசிரியர் பயிற்சி நெறி 1990க்கு க. பொ. த. (சா/த)சித்தியடைந்த பெண்கள் விண்ணப்பிக்கலாம். நேரில் வரமுடியாதோர் தபால்வழியிலும்பயிலலாம். பாலர் ஆசிரியர் சங்கம், மே/பா. உயர் கலைக்கல்லூரி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம். (சி 3783)

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

# யாழ்ப்பாணத்தில் 1990 மார்ச் 31 வரை 2,952 வாகனங்களுக்கு காப்புறுதி செய்யப்பட்டுள்ளது!

(உடுவில்)

இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபன யாழ்ப்பாணக்கிளையில் இவ்வருடம் மார்ச் மாதம் 31ம் திகதிவரை 2952 வாகன சொந்தக்காரர்கள் தம் வாகனங்களை காப்புறுதி செய்துள்ளார்கள்.

யாழ்ப்பாணம் காப்புறுதிக் கூட்டுத்தாபன பிரதேசக் கணக்காளர் திரு. எம். சிவானந்தன் இத்தகவலை ஈழநாடுவுக்குத் தெரிவித்தார்.

நாளாந்தம் சுமார் 150 பேர் வரையில் தற்போது வாகனக் காப்புறுதி செலுத்தி வருகின்றனர். செய்து கொள்வோர் சரியானமுறையில் தமது விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து சமர்ப்பித்தால் அவர்கட்கான காப்புறுதிப் பத்திரங்களை அரைமணி நேரத்தில் எம்மால் வழங்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நிதிக்கம்பனிகளில் அல்லது வேறு ஸ்தாபனங்களில் வாகனத்தை ஈடுவைத்துகடன் பெற்றவர்கள் தமது கடனைக் கட்டி முடித்தமைக்கான விடுதலைப்பத்திரங்களை சம்பந்தப்பட்ட ஸ்தாபனங்களிலிருந்து பெற்றுச் சமர்ப்பித்தல் வேண்டும். இல்லாவிடின் மூன்ருமாள் காப்புறுதி பெற்றுக் கொள்வதுகஷ்டமாகஇருக்கும் கடன் விடுதலைப்பத்திரம் சமர்ப்பிக்காவிடின் அவர்களுக்கு முழுக்காப்புறுதியே செய்து தரப்படும். அதற்கு வாகன உரிமையாளர்கள் தம்வாகனத்தை ஸ்தாபனத்தின் நேரடிப் பார்வைக்கு சமர்ப்பிக்க வேண்டி ஏற்படும்.

மேலும் 1988ம் ஆண்டு முடிய உள்ள காப்புறுதிகளுக்கு ஒரு வருடத்துக்கு ஆயிரத்து அறுபது ரூபாவரை லாபப் பங்கீடுகள் செலுத்தப்பட்டு வருகின்றன. ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை இவ்வாறு இலாபப் பங்கீடுகள் வழங்கப்பட்டு வருகின்றன. (109)

# "சுவைபடச் சொல்லி சிந்திக்கவைப்பவன் கவிஞன்'

## - உள்ளூராட்சி ஆணையாளர்

(ஆனைக்கோட்டை)

''சுயமாகவே சிந்தித்து மக்களையும் தரமான விஷயங்கள் பற்றி சிந்திக்க வைப்பவன் நல்ல கவிஞனுக இருக்கின்ருன். எண்ணங்களை அழகுபட வடித்தெடுத்துக் கொடுப்பவன் அவன். இதில் சில கவிஞர்கள் தனித்தன்மைபெற்று தமது அனுபவம்மிக்க ஆற்றலை வெளிப்படுத்தி மக்களிடையே நன்மதிப்பைப் பெறுகிருர்கள்.''

இவ்வாறு யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. டிவகலாலா (தேவராசன்) கவிஞர் சத்திய சீலனின் 'அல்லைப்பிட்டிப்பதி அருளப்பர் அம்மானை' இலக்கிய நூல் வெளியீட்டுவிழாவிற்குத் தலைமை தாங்கி உரைநிகழ்த்துகையில்எடுத்துக் கூறினுர்.

திரு. டிவகலாலா மேலும் தமது உரையில்; வேதனையுற்றுக்கிடக்கும் மக்களுக்கு ஆறுதல் தருவது நல்ல இலக்கியம் என்றும்கவிஞர்சத்தியசிலனின் கவிதை முயற்சிகள் இவற்றுக்கொரு எடுத்துக்காட்டு எனவும் கூறினுர். நல்ல தினங்களில் மக்களிடையே மொழிப்பற்றை ஏற்படுத்த இத்தின வாழ்த்து மடல்களில் மண்ணுக்கேற்ற கவிதை மடல்களை ஆக்கித்தருபவர் அவர் எனவும் பாராட்டுத் தெரிவித்தார்


சுவாமி ஜெயசீலன் தமது நூல் வெளியீட்டுரையில் ஒருவன் ஒருகருத்தை சொல்லும் போது அந்த விடயத்துக்கும் அவனுக்குமிடையே நெருக்கமிருக்கவேண்டுமெனவும் இல்லாவிடில் தொடர்பில்லாமல் போய்விடுமெனவும் கூறினுர் சத்திய சீலனின் இந்நூலில் நல்ல எண்ணங்கள் அழகுறக் கூறப்பட்டுள்ளதாகவும் அவை ஓரளவு ஆங்கிலக் கவிஞர்களது தரத்துக்கு உயர்ந்து நிற்பதாகவும் அவர் எடுத்துக்கூறினுர்.

திரு. சொக்கன் தமது ஆய்வுரையில்: ''சொற்பஞ்சமற்றவர் சத்திய சீலன் என்றும் ஈழத்தில் தரமான கவிஞர்களில் குறிப்பிடத்தக்க ஒருவர் என்றும் குறிப்பிட்டார். பாமரமக்களுக்கும் கருத்துக்களைஎடுத்துக்கூறஉதவுவதுஅம்மானை எனவும் அவர் கூறினுர். இன்ப அனுபவங்களை மற்றவர்களுடன் பகிர்ந்து இன்பம் காண்பவன் கவிஞன் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அல்லைப்பிட்டி இலக்கிய வட்டத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்நூல் வெளியீட்டுவிழா பாரசக்தி வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

சத்தியசீலனின் நூல்கள் அமைந்த கண்காட்சி ஒன்றும் விழாவில் இடம்பெற்றது. (139)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் தம்பிமுத்து ஆனந்தவேல்

மண்ணின் மடியில்: 28-06-1938

ஆண்டவன் அடியில்: 16-04-1988

திதி: 25-04-1990

அன்னுரின் ஆத்மா இறைவனின் பாதாரவிந்தங்களில் சாந்தி பெறுவதாக!

பிரிவால் வாடும்:
மனைவி, உற்ருர், உறவினர்.

நீர்வேலி தெற்கு.
நீர்வேலி.

(சி-3785)





இன்றைய
№ 1
நீலசோப்
தேசிக்காய் வாசனையுடன்
LANKA
எம்டீ நீல சோப்
எம்டீ என்ரபிறைஸஸ், அச்சுவேலி



# SHABRA TROPHY

Calling all Cricket loving Clubs
in the Northern Province
for their

**4th Annual Limited Overs Cricket Tournament**

for

THE SHABRA TROPHY

Organised by

Jolly Stars Sports Club

Sponsored by

## SHABRA UNICO FINANCE LTD.

Entries close at 6 p. m. on Friday 4th May 1990.
Draw at 9 a. m. on Sunday 6th May 1990.
Please collect your entry forms & Tournament rules from

**SHABRA UNICO FINANCE LTD.**
207, Power House Rd,
JAFFNA.

OR

Capt.
N. SOMASUNDARAM
45, College Rd.,
JAFFNA.

(A 709)


### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# பதவி வெற்றிடம்

இப் பல்கலைக்கழகத்தில் மேற்குறித்த பதவிக்கான விண்ணப்பங்கள் 1990-05-17 வரை என்னுல் ஏற்றுக் கொள்ளப்படும்.

**பதவி:**
சுருக்கெழுத்தாளர் (தமிழ்) தரம் III.

**சம்பள அளவுத் திட்டம்:**
ரூபா 2085-10x40-7x50 2835/- (மாதமொன்றுக்கு) இவை தவிர அரசாங்கத்தினுல் வழங்கப்படும் வாழ்க்கைச் செலவுப்படி உட்பட ஏனைய படிகளும் செலுத்தப்படும்.)

**தகைமைகள்:**

1. இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் மூன்று பாடங்களில் திறமைச்சித்தியுடன் க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். திறமைச் சித்திகளுள் தமிழ் மொழி அல்லது இலக்கியம் அடங்கியிருத்தல் வேண்டும்.
2. தமிழ்ச் சுருக்கெழுத்தில் பின்வரும் ஆகக்குறைந்த வேகத்துடன் தேர்ச்சிபெற்றிருத்தல்வேண்டும்.
   சுருக்கெழுத்து- நிமிடமொன்றுக்கு 70 சொற்கள்.
   தட்டச்சில்பொறித்தல் - நிமிடமொன்றுக்கு 20சொற்கள்.

**வயது:**
40 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது.

**தெரிவு:**
தேர்வு, நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மூலம்.

**குறிப்பு:**
ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும்சுருக்கெழுத்துத் தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

விண்ணப்பங்களை நேரிலோ அல்லது சுயமுகவரியிடப்பட்ட முத்திரை ஒட்டிய 23 X 10 செ. மீ. அளவுடைய உறைகளை அனுப்பி தபால் மூலமாகவோ பெறவிரும்புவோர் இப் பல்கலைக்கழகத்திலுள்ள சிரேஷ்ட உதவிப்பதிவாளர்/தாபனத்திடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளின் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை அந் நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்புதல் வேண்டும்.

குறித்த திகதியின்பின்பு கிடைக்கும் விண்ணப்பங்களும் தெளிவாக விபரங்கள் குறிப்பிடப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

**பதிவாளர்.**
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1990-04-18. (ஏ 708)

★ வல்லரசுகளிடையே பிணக்கு

# சோவியத்யூனியன்மீது பொருளாதாரத் தடை;

# அமெ. அதிபர் புஷ் நடவடிக்கை!

## உள் விவகார தலையீட்டிற்கு கொர்பச்சேவ் எச்சரிக்கை

[வாஷிங்டன்]

**சோவியத் யூனியன் மீது மட்டுப்படுத்தப்பட்ட பொருளாதாரத் தடை நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போவதாக அமெரிக்க அதிபர் திரு. ஜோர்ஜ் புஷ் அறிவித்துள்ளார். லிதுவேனிய குடியரசு மீது சோவியத் மேற்கொண்டுள்ள பொருளாதாரத் தடைக்கு எதிராகவே அமெரிக்கா இந்த நடவடிக்கையில் இறங்குகிறது.**

இதுதொடர்பாக நேற்று முன்தினம் அதிபர் திரு. புஷ் அமெரிக்க காங்கிரஸ் சபையில் அறிக்கை ஒன்றையும் சமர்ப்பித்துள்ளார். அதிபர்புஷ்ஷின் இந்த நடவடிக்கைக்கு காங்கிரஸ் சபைஅங்கீகாரம் வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

லிதுவேனியாமீது சோவியத் மேற்கொண்டுள்ள கடும் பொருளாதாரதடையை நீக்குமாறு அமெரிக்கா பலதடவைகள் எச்சரித்த போதும் இதனை அதிபர் கொர்பச்சேவ் அலட்சியப்படுத்தியதுடன் உள்நாட்டு விவகாரத்தில் அமெரிக்க தலையீட்டையும் வன்மையாக கண்டித்திருந்தார்.

இதையடுத்தே சோவியத் மீது மட்டுப்படுத்தப்பட்ட பொருளாதாரத் தடைகளை



மேற்கொள்ள அமெரிக்கா முடிவுசெய்துள்ளதாக தெரியவருகிறது. இதன் முதற்கட்டமாக நாளை மாஸ்கோவில் நடைபெற இருக்கும் இருநாட்டு பொருளாதார, தொழில்நுட்ப ஒத்துழைப்பு மாநாட்டை அமெரிக்காபகிஷ்கரிக்சப்போவதாக அறிவித்துள்ளது.

மேலும் சோவியத்திற்கு வழங்கும் சில முக்கிய பொருளாதார உதவிகளையும், தொழில்நுட்ப உதவிகளையும் நிறுத்தவும் முடிவுசெய்துள்ளது. இதுபற்றி தற்போது தீவிரமாக ஆராயப்பட்டுவருவதாகவும் அதிகாரிஒருவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் மட்டுப்படுத்தப்பட்ட பொருளாதாரத்தடை நடவடிக்கைகள் குறித்து சோவியத் எதுவித கருத்தும் வெளியிடாத போதும் லிதுவேனிய விவகாரங்களில் அமெரிக்காவின் தலையீட்டை உடன் நிறுத்துமாறும் மீண்டும் அதிபர் கொர்பச்சேவ் கடும்எச்சரிக்கை விடுத்துள்ளார். (சி)

## வெளி நோயாளருக்கு
## சுகாதார வசதி
## செய்வதற்கு ஏற்பாடு

(புலோலி)

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலை வெளிநோயாளர்களின் சுகாதார வசதி கருதி வெளி நோயாளர்களுக்கு இரு மலசலகூடங்களும் கட்ட ஏற்பாடு செய்துள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை மேற்படி வைத்தியசாலை அபிவிருத்திச் சபை மேற்கொண்டுள்ளது.

இவ்வைத்தியசாலை வெளி நோயாளர் பிரிவில் இருந்து வந்த மலசலகூடங்கள் பழுதடைந்து வருடக்கணக்கான போதிலும் அவை திருத்தப்படவில்லை. இதனால் வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை பேற வருவோர் குறிப்பாக கர்ப்பிணி சிகிச்சைப் பிரிவுக்கு வரும் கர்ப்பிணிப் பெண்கள், இருதய, சலரோக சிகிச்சைப் பிரிவுகளுக்கு வரும் வயோதிபர்கள் கஷ்டப்படுகின்றனர்.

இக்கஷ்டங்களை உணர்ந்த வைத்தியசாலையின் அபிவிருத் சபை, கொடிவாரத்திலிருந்து பெறப்பட்ட நிதியிலிருந்து 26 ஆயிரம் ரூபா செலவில் வெளிநோயாளர் பிரிவுக்கென மலசலகூடங்களை அமைக்கவுள்ளது.

இம்மலசலகூடங்களைக் கட்டுவதற்கான வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது. (61)

கெரில்லாக்கள் கைவரிசை

## ஆப்கான் பயணிகள் விமானங்கள்
## ஏவுகணை தாக்குதலில்சிதறின
## 30 பயணிகள் பலி

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் கெரில்லாக்கள் மேற்கொண்ட ஏவுகணைத்தாக்குதலில் இருபோக்குவரத்து விமானங்கள் சிதறி வீழ்ந்துள்ளன. இவற்றிலிருந்த சுமார் 30 பயணிகள் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி இரு ஏவுகணைத் தாக்குதல்களும் கடந்தவாரப் பிற்பகுதியில் இடம்பெற்றுள்ளன. கரிசன்நகர் பகுதியில் 24 மணிநேர இடைவெளியில் இவ்விமானங்கள் வீழ்த்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சோவியத் தயாரிப்பான இப் பயணிகள் விமானம் இரண்டும் வீழ்த்தப்பட்டது குறித்தும் பொதுமக்கள் இழப்பு பற்றும் இதுவரை ஆப்கான் அரசு

(5ம் பக்கம் பார்க்க)

## பாடசாலை உபகரணங்கள்
## நியாய விலைக்கு
## பெற 'புத்தகசாலை'

(கொழும்பு)

கல்வி ஊழியர்களின் மட்டுப்படுத்தப்பட்ட கூட்டுறவுச் சிக்கன கடனுதவிச் சங்கத்தின் புத்தகசாலைஒன்று இம்மாதம் 28-ம் திகதி காலை மேற்படி சங்க சாகர மண்டபத்தில் கல்வி உயர்கல்வி அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலியால் திறந்து வைக்கப்படவிருக்கிறது.

இவ்வைபவத்தில் ராஜாங்க அமைச்சர் திருமதி மனோகரி புலேந்திரனும் கலந்துகொள்கின்றார்.

சங்க அங்கத்தவர்களினதும் அவர்களின் பிள்ளைகளுடைய கல்வி அபிவிருத்தி, கல்விக் கடமைகளுக்கு உதவி அளிக்கும் வகையில் தேவையான புத்தகங்கள், பத்திரிகைகள், பாடசாலை உபகரணங்கள், காகிதங்கள் மற்றும் பாவனைப் பொருட்களும் நியாயவிலைக்கு கொள்வனவு செய்யக்கூடிய தான வாய்ப்பினை 'இசுறு' புத்தகசாலை என அழைக்கப்படும் இந்தப் புத்தகசாலை வழங்கவிருக்கிறது. (139

## கெரில்லாக்களுக்கு எதிராக
## அமெ. இராணுவம்
## பெருவில் நடவடிக்கை

(லீமா)

பெரு நாட்டில் போதைவஸ்து கடத்தல் நடவடிக்கைகளில் கெரில்லாக்கள் ஈடுபடுவதைத் தடுக்க அமெரிக்கா அங்கு இராணுவ தளங்களை அமைத்து பயிற்சிகளில் ஈடுபட்டுவருகிறது.

பெருவில் அரசை எதிர்த்துப் போராடிவரும் வலதுசாரி கெரில்லாக்கள் பெருமளவில் போதைவஸ்து கடத்தலில் ஈடுபட்டுவருகிறார்கள். இதனை தடுக்க பெரு அரசு துருப்புகள் மேற்கொண்ட பல நடவடிக்கைகள் பலன் எதனையும் தரவில்லை.

இதையடுத்தே அமெரிக்கா பெரு இராணுவத்திற்குப் பயிற்சியளிக்கும் விதத்திலும் போதைவஸ்து கடத்தலைத் தடுக்கவுமாக அங்கு இராணுவத் தளங்களை அமைத்துப் பயிற்சிகளில் ஈடுபட்டுவருகிறது. (சி)

## 'ஒஸ்ரலேஷியா'கிண்ணபோட்டி
## ஷார்ஜாவில் இன்று ஆரம்பம்

(ஷார்ஜா)

ஆறு நாடுகள் பங்கு பற்றும் 'ஒஸ்ரலேஷியா' கிண்ண சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று ஷார்ஜாவில் ஆரம்பமாகிறது. இன்றைய முதல் நாள் ஆட்டத்தில் இந்தியாவும் இலங்கையும் பங்குபற்றுகின்றன.

ஷார்ஜாவில் நடைபெறும் ஐம்பதாவது சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியாக இது அமைவதால் இம்முறை வெகு சிறப்பாக போட்டிகளை நடாத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இப்போட்டிகளில் இந்தியா' இலங்கை, பாகிஸ்தான்' 'ஏ' குறூப்பிலும் ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, பங்களாதேஷ் 'பி' குறூப்பிலும் பங்குபற்றுகின்றன. அடுத்தமாத நடுப்பகுதி வரை இப்போட்டிகள் நடைபெறவுள்ளது.

இந்திய அணியில் பல புதிய முகங்களுடன் ஸ்ரீ காந்தும், ரவிசாஸ்திரியும் மீண்டும் அணியில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்திய அணிக்கு அஸாருதீன் தலைமை தாங்குகிறார். இலங்கை அணிக்கு அர்சுன ரணதுங்க தலைமை தாங்குகிறார்.

இறுதிநாள் போட்டியை தொடர்ந்து முன்னுள் பிரபல வீரர்கள் ஐவருக்கு தலா பத்து லட்சம் ரூபா நன்கொடை நிதியாகவும் வழங்கப்படவுள்ளது. (சி)

## காஷ்மீர் எல்லையில் யுத்தமா?
## பாகிஸ்தான் மறுக்கிறது!

(இஸ்லாமாபாத்)

இந்தியா–பாகிஸ்தான்எல்லைபுறத்தில் நேற்று முன்தினம் சண்டை நடைபெற்றதாக கூறப்படுவதை பாகிஸ்தான் மறுத்துள்ளது. இது வேண்டுமென்ற பிரசாரமாக இந்தியா பயன்படுத்துவதாகவும் குற்றம் சாட்டியுள்ளது.

காஷ்மீர் எல்லையில் இரு தரப்பிடையேயும் நடைபெற்ற சண்டையில் தலா 20 வீரர்கள் கொல்லப்பட்டதாக ஏஜென்ஸி செய்திகள் கூறியிருந்தபோது பாகிஸ்தான் தரப்பிலேயே இவ் உயிரிழப்பு ஏற்பட்டதாகவும் சண்டை நடைபெற்றது உண்மையென்றும் இந்தியா கூறியிருந்தது.

இதனை வன்மையாக மறுத்துள்ள பாகிஸ்தான், எல்லைப் புறத்தில் இவ்வாறான துப்பாக்கி பிரயோகங்கள் நடைபெறுவது வழமையான சம்பவமென்றும் இதனை இந்தியா பெரிதுபடுத்தி பிரசார வேலைகளில் ஈடுபடுவதாகவும் கூறியுள்ளது.

எனினும் இவ்வாறான சண்டைகள் கடந்த சில வாரத்தில் பலதடவைகள் இடம்பெற்றுள்ளதாகவும் இதில் இருதரப்பிலும் உயிர்சேதம் ஏற்பட்டதாகவும் அவதானிகள் தெரிவித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. (சி)

## காணிக்கச்சேரி

(யாழ்ப்பாணம்)

பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் எதிர்வரும் 27-ம் திகதி ஜெயபுரம் கிராம சேவையாளர் பிரிவிலும், 28-ம் திகதி பல்லவராயன்கட்டு கிராம சேவையாளர் பிரிவிலும் காணிககச்சேரி நடைபெறவுள்ளது. (56)

### மணிவாக்கு

மனவெழுச்சியால் ஒன்றைக் கண்டும் கேட்டும் தீண்டியும் சுவைத்தும் முகர்ந்தும் உணர்ச்சி பெரு திருப்பவனே புலன்களை வென்றவனுவான்.

மநுதர்ம நீதி.

## நமது நோக்கு

# சீர்குலைக்கும் முயற்சிகளா?

"விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையே மோதலை ஏற்படுத்தச் சில தீய சக்திகள் முயற்சிக்கின்றன. இது தொடர்பாக அரசாங்கம் உடன் தலையிட்டு நடவடிக்கை எடுக்கவேண்டும்!"-இவ்வாறு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் பிரதித்தலைவர் தெரிவித்திருக்கிறுர்.

நீண்டகாலமாக வேதனைகளை அனுபவித்த வடக்குக் கிழக்கு மக்களின் கவனம் இன்று படிப்படியாக பொருளாதார அபிவிருத்திக்குத் திரும்புகின்றது.

மோதல் முறைகளைத் தவிர்த்து இராஜதந்திர நடவடிக்கைகள் மூலமே அரசியல் தீர்வுகள் காணத் தலைவர்கள் ஈடுபட்டுவருகிறுர்கள். இதற்குப் பக்கபலமாக மக்களின் எழுச்சியும் உதவுகின்றது.

ஆனுல், அரசியலிலே இலாபம்தேட முயற்சிப்பவர்கள் குட்டையைக் கலக்கி வருவது வேதனைக் குரியது.

"வடக்குக் கிழக்குப் பிரச்சனைக்குப் பேச்சுவார்த்தை மூலமே தீர்வுகாணப்படவேண்டும். அவசரப்பட்டால் நிலைமை மோசமடையும்!" என்கிறுர் ஜனுதிபதி.

நிதானமாக 'அரசியற் சர்க்கஸ் கயிற்றில்' நடந்து வருகிறுர்!

"இந்தப் பிரச்சனையைத் தீர்க்க நாம் பல்வேறு உத்திகளைக் கையாண்டோம்; அதனுல் நாடே தீப்பற்றி எரிந்தது; எனவே கடந்தகாலப் படிப்பினைகளை அடிப்படையாகக்கொண்டு பிரச்சனைகளுக்கு யதார்த்த பூர்வமான தீர்வு கிடைக்கும் என நம்புகிறேன்" என அவர் மேலும் கூறியிருக்கிறுர்.

சில கொள்கைகளை வெளிப்படுத்த அவர் கையாளும் வழி புதுமையானது; விகாரை ஒன்றின் விழாவிலே மேற்படி கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறுர்.

இடமறிந்து, காலமறிந்து கருத்துக்களை வெளியிட்டு வருகிறுர்.

பட்டதுபோதும் இனியும் படவேண்டாம் என்ற மனப்பக்குவத்தோடு பேசிவருகின்றுர்.

அனுபவத்தோடு பிரச்சனைகளை அணுகுகின்றுர். ஆழமான சிந்தனையோடு தீர்வுகாண முயற்சிக்கின்றுர்.

இந்த வேளையில், தேவையற்ற மோதலைத்தூண்டிவிடச் சிலர் முயற்சிப்பதை எமது பகுதித் தலைவர்கள் சுட்டிக்காட்டி வருகிறுர்கள்.

பிரச்சனைகள் சுமுகமாகத்தீரும் என்ற நம்பிக்கை மக்களுக்கு ஏற்பட்டுவருகின்றது. எதிர்காலச் சுபீட்சத்திற்கு இது நல்ல அறிகுறியோ?

இந்தச் சூழ்நிலையில், தென்னிலங்கைப் பத்திரிகைகள் சில விஷமத்தனமான செய்திகளைப் பிரசுரிப்பதையும், முந்திக்கொண்டு சில ஆலோசனைகளை முன்வைப்பதையும் நாம் வேதனையோடு சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

அண்மையில் நடந்த செய்தியாளர்கள் கூட்டத்தில் அமைச்சர் ரஞ்சன கூறியதென்ன?

"நாங்கள் சண்டைபிடிக்கப் போவதில்லை; நீங்கள் எங்களைச் சண்டைக்குத் தூண்ட முயற்சிக்கிறீர்கள்; அப்போதுதான் சண்டைகள்பற்றி எழுதலாம்; சென்ற பத்து வருடங்களாக இதைத்தான் செய்து வருகிறீர்கள்!"

தமிழ் மக்களின் அடிப்படை உரிமைப்பிரச்சனைகள் நிதானமாக, நேர்மையாத் தீர்க்கப்படவேண்டியவை; இதனைக் குழப்பியடித்துத் திசை திருப்ப முற்பட்டால், நாடு முழுவதுமே பாதிக்கப்படும் என்பதை முன்னெச்சரிக்கையாகக் கூறிவைக்க விரும்புகிறேம்!

## ஜனசக்தி புத்தாண்டு விழா

(மானிப்பாய்)

யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள சிறுகுறிச்சி இல 19 ஜே 45, பிரிவில் ஜனசக்தி புத்தாண்டு விழா வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

ஆனைக்கோட்டை அறிவொளி அரங்கில் நடைபெற்ற இவ் விழாவுக்கு ஜனசக்தித் தலைவர் திரு. எஸ். கந்தசாமி தலைமை தாங்க அப்பகுதி கிராம சேவையாளர் திரு. எம். எஸ். ஜனுல் மங்கள விளக்கேற்றி நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்தார்.

தலைவர் முன்னுரையைத் தொடர்ந்து "ஜனசக்தி" என்னும் பொருள் பற்றி செல்வி தமயந்தி சிவராசா சொற்பொழிவாற்றினுர். இதன் பின்னர் "ஏழைக்கு வந்த வாழ்வு" "விதியா சதியா" ஆகிய நாடகங்கள் ஜனசக்திப் பிள்ளைகளினுல் நடித்துக்காட்டப்பட்டன.

## அரசாங்க அதிபர் விஜயம்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. மாணிக்கவாசகர் இம் மாதம் 26ம் திகதி பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள ஜெயபுரம் கிராமத்திற்கு உத்தியோக பூர்வமான விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார். இவர் முன்னர் முழங்காவில் கிராமத்திற்கு விஜயமொன்றை மேற்கொண்டது குறிப்பிடத்தக்கது. (56)

### முச்சந்தியில் மூன்று பேர்

# ஒரு கிலோ அரிசி மூன்றரைப் பேணி
# ஒரு கிலோ மா ஐஞ்சு பேணி
# இதில் ஐம்பது கிறும் நூறு கிறும் வெட்டு
# இதுதானய்யா சங்கக் கடைகள்

கூட்டுறவுச் சங்கக்கடை பற்றி மக்களிடையே பல அபிப்பிராய பேதங்கள் உள்ளன. அந்த அபிப்பிராய பேதங்கள் பற்றி மூவர் கருத்துக்கள் இடம்பெறுகின்றன.

வழமைபோன்று கூட்டுறவு சங்கக் கடையைப்பற்றி நல்லூரைச் சேர்ந்த சி. கணபதியிடம் வினவினேம். அவர் சொல்கிறுர் கேளுங்கள்.

"தம்பி சங்கக்கடையில் எப்படியாவது அரிசியிலோ, மாவிலோ நூறு கிறும், 50 கிறும் வெட்டிப் போடுவாங்கள். எங்களிட்டை 'ருப்' விட ஏலாது. தராசு படி இல்லா விட்டாலும் நாங்கள் இவங்களின்ர கள்ளத்தை பிடிச்சிடுவோம்."

"ஒரு கிலோ அரிசி என்றுல் பால் பேணியால் மூன்றரைப் பேணி இருக்கும். அமெரிக்கன் மா ஒரு கிலோ ஐந்து பேணியிருக்கும். சங்கக்கடையில் தருகிற சாமான்களை அளந்து பார்த்தால் அதில் காப்பேணி அரைப்பேணி துண்டுதான்."

"முத்திரைக்கு சாமான் கொடுப்பாங்கள். சில நேரங்களில் மாடுகள் கூட தின்னுத அரிசிகளும் தருவாங்கள். கேட்டா சொல்லுவாங்கள். இதுதான் அரிசி விருப்பமெண்டால் வேண்டுங்கோ இல்லாட்டி விடுங்கோ என்னதம்பி செய்கிறது நம்மட வறுமையில் வேண்டத்தான்வேணும்"

சில நேரங்களில் கடைப்படிகளில் காவல் காக்கிற நிலைமையும் இருக்கு. எட்டரைக்கு கடை திறக்க வேண்டுமெண்டால் பேந்தென்ன ஒன்பது பத்துமணி" என்று குறைபட்டுக்கொள்கிறுர், சங்கக்கடைகளைப் பொதுமுகாமையாளரை அணுகுகிறேம். அவரின் கருத்துக்கள் இவை.

"பொதுமக்கள் எங்களைப் பேசுவாங்கள். அது சரியில்லை. இது சரியில்லையென்று. அதுக்கு நாங்களென்னையா செய்கிறது. எங்கட தலைமைக்கந்தோர் வழங்குவதைத்தான் நாங்கள் கொடுக்க முடியும்."

"இன்னெரு குறையும் சொல்லுவாங்க சில சங்கக் கடையில் முத்திரைக்கு அரிசி மா கொடுக்காமல் வாளி, அலுமினியம், பிளாஸ்டிக் பொருட்கள் குடுக்கிறுங்கள் என்று. இந்த விசயத்தில்

(5ம் பக்கம் பார்க்க)

# பஸ் சேவை சீராகுமா?

## மக்கள் கருத்து

இலங்கை போக்குவரத்துச் சேவை தேசியமயமாக்கப்பட்டபோது எல்லோரும் நல்ல சேவை கிடைக்கும் என எதிர்பார்த்தனர். இன்று 31 வருடங்கள் சென்றுவிட்டன. பஸ்சேவைபற்றி குறைபடாதவர்கள் எவரும் இல்லை என்ற சொல்ல வேண்டும். அரசின் பொறுப்பு மக்களுக்கு உணவு, உடை, உறைவிடம், பிரயாண வசதி முதலியன வழங்குவதேயாகும். பதவிக்கு வந்த அரசுகள் யாவும் இவ்விடயத்தில் குறைபாடுகளுககு இலக்காகியே செயற்பட்டன. இம் மாற்றத்தினை செயற்படுத்த முடியாத அரசின் பிரதிநிதிகள் காலத்திற்குக் காலம் வாக்குறுதிகளை வழங்கி காலத்தைக் கழித்து வந்தனர். பதவிக்கு வந்ததும் பத்திரிகை மாநாடுகள் நடாத்துவதும் மந்திரிகள் வெளிநாட்டுப் பயணங்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன என விளம்பரங்கள் கொடுத்து வந்தார்கள். ஆனுல் மக்கள் குறை நீக்கப்பட்டனவா? முக்கியமாக நாட்டில் போக்குவரத்துச் சேவை எல்லாவற்றிலும் முதன்மை பெறுகின்றது. வடமாகாணத்தைப் பொறுத்தவரையில் சேவை மிகவும் மோசம் என்றே சொல்ல வேண்டும். பஸ்கள் இல்லை, இயந்திரம் இல்லை, உதிரிப்பாகங்கள் இறக்குமதி செய்ய வேண்டும் என்ற நிலைப்பாடே தொடர்கிறது. இதனைக் கேட்டு பொதுமக்களுக்கு அலுத்துப் போய்விட்டது. பணம் இல்லையென்றுல் அதனைப் பெற வழிவகைகள் காணப்பட வேண்டும். திறைசேரியால் பணம் இல்லையென்றுல் இச்சேவைகளை நடாத்துவதற்கு மாற்று வழிகாணப்படல் வேண்டும். நிதிபற்றுக் குறை இருந்தும் இடாம்பிக செலவுகள் தொடர்கின்றன.

தாராள பொருளாதாரக் கொள்கையின் பிரதிபலிப்பு இன்று மினிவான் சேவை. இச்சேவையும் பொதுமக்களுக்கு நிறைவு கொடுப்பதாக இல்லை. இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கும் பொதுமக்களுக்கு நன்மைபயக்கக் கூடியதுமான உருப்படியான சட்ட நடைமுறைகள் இருப்பதாகத் தெரியவில்லை. தேசியமயமாக்கப்படுவதற்கு முன்னர் தனியார் பஸ் நிறுவனங்கள் இருந்தன.

வலிகாமம் மேற்கு, யாழ். பருத்தித்துறை, வடஇலங்கை மினிபஸ் கம்பெனி லிமிட்டெட், சென்றல் பஸ் கம்பெனி போன்ற தனியார் நிறுவனங்கள் இச்சேவைகளை நடாத்தின. இன்று இச்சேவைகளை இ. போ. ச. வும் மினிபஸ்ஸும் செய்கின்றன. பெருகிவரும் ஜனத்தொகைக்கேற்றுற்போல் போக்குவரத்துச் சேவைகள் விஸ்தரிக்கப்படவில்லை. முன்னர் இ. போ. ச சேவை நடைபெற்ற சில இடங்களுக்கு இன்று பஸ் சேவைகளே இல்லை. மினிபஸ் சேவைகளும் வருமானம் தரக்கூடிய இடங்களையே பிடித்துக் கொண்டுள்ளன.

பஸ்சேவை அத்தியாவசியமான சேவையாகும். இதனை அரசு சீர்கேடின்றிச் செய்ய முன்வர வேண்டும். இல்லாவிட்டால் இதனைத் திறம்பட நடத்தக் கூடியவர்களிடம் ஒப்படைக்க வேண்டும். உதாரணமாக இலங்கையில் உள்ள நெசவாலைகள் திறமையுள்ளவர்களிடம் ஒப்படைகப்பட்டு இன்று நன்றுக இயங்குகின்றன. பொதுமக்கள் நலனில் மிகவும் அக்கறை கொண்ட நாட்டின் ஜனுதிபதி இதனை உடன் கவனத்தில் கொள்வதற்கு சம்பந்தப்பட்ட இ. போ. சபைகள் மந்திரிமார்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். சுலபமாக இலகுவான பிரயாணம் இருந்தால்தான் பிரயாணம் செய்பவர்களுக்கு நிம்மதி ஏற்படும். எமது பகுதியில் உள்ளபோக்குவரத்துச் சாதனங்கள்மூலம் ஒருவர் பிரயாணம் செய்தால் அவர் தனது திறனை இழப்பதுடன் மனச்சஞ்சலத்திற்கும் ஆளாக வேண்டியிருக்கிறது. ஆகையால் இ. போ. சா. கள் பஸ்வண்டிகள் இல்லாது இயங்குவதால் ஏதாவது பயன் இருக்குமா? என்ற கேள்வி எழுவது நியாயமானதே. அத்துடன் கிராமப்புறங்களில் விவசாய உற்பத்தியில் ஈடுபட்டுள்ள கிராமவாசிகள் தாங்கள் உற்பத்தி செய்த பொருட்களை சந்தைப்படுத்துவதிலும் பல சிரமங்கள் உண்டு. போக்குவரத்து சீர் இல்லாததால் பொருளாதாரக் கஷ்டங்களும் ஏற்படுகின்றன.

பாதிக்கப்பட்ட
பஸ் பிரயாணி
சுன்னுகம்

## பலதும் பத்தும்

### 'அவருக்கு' வந்த சங்கடம்

'அந்த நாடகம், என்ற தலைப்பில் 23-4-90ல் 'அவர்' பற்றி எழுதினேமல்லவா? மேலும் சில தகவல்கள்!

எம். ஆர். இராதாவின் 'ரத்தக்கண்ணீரால்' 'அவர்' கவரப்பட்டார். அந்த நாடகம் சினிமாவாக வரமுன்பே யாழ். மண்ணுக்கு ஏற்ற வகையில் கதையை மாற்றி எழுதிதானே பிரதான பாகமேற்று, சண்டிருப்பாய் இந்துக்கல்லூரியில் அரங்கேற்றினுர். புதிய உத்திகள். எனவே பல இடங்களிற் புகழோடு அரங்கேறியது.

1953/54 காலப்பகுதியில் யாழ். இந்து மகளிர் கல்லூரிக் கட்டட நிதிக்காக களியாட்டவிழா.

இரத்தக்கண்ணீர் அங்கு மேடையேறுகிறது. நாடகம் ஆரம்பமாகச் சிறிது நேரத்திற்கு முன் ஒரு துணை நடிகர் திடீரென அடம்பிடிக்கிறுர்.

அதேமேடையில், தலைமை தாங்குபவர் மூலம் 'நடிகவேள்' பட்டம் தரப்படாவிட்டால் நடிக்கமாட்டேன் என்கிறுர்!

'அவருக்கு' ஒரே 'டென்சன்' – சங்கடம்!

நகைச்சுவை நடிகர் (பாடசாலை அதிபராக இருந்து சில மாதங்களுக்கு முன்புதான் மாரடைப்பாற் காலமானவர்) சங்கடம் தீர்க்க முன்வந்தார்; ஏதோ செய்கிறுர்; குழப்பமின்றி நாடகம் ஓஹோ என்று சிறப்பாக நடக்கிறது.

நகைச்சுவை நடிகர் மேடையிலேயே - நாடகம் நடக்கும்போதே- அடம்பிடித்த துணை நடிகருக்கு அடிக்கடி தனது மடியைத் தொட்டுக்காட்டியிருக்கிறுர்!

நாடகம்முடிந்த பின்தான் 'அவருக்கு'ப் புரிந்தது, என்ன நடந்ததென்று; துணை நடிகர் எப்படிப் பெட்டிப் பாம்பானுரென்று!

நகைச்சுவை நடிகர் செய்ததுஎன்ன? துணைநடிகரைத் தனியாக அழைத்திருக்கிறுர்; "பட்டமா வேண்டும், இதுதான் கிடைக்கும்!" என்று கூறிய 'ஒன்றைக்' காட்டி மிரட்டிவிட்டுத் தனது மடியில் வைத்திருந்திருக்கிறுர்!

வாணி

## இனப் பிரச்சனைக்கு நியாயமான அரசியல் தீர்வு காணப்படவேண்டும்

### கம்யூனிஸ்ட் கட்சி [இடது] மேதினச் செய்தி

(யாழ்ப்பாணம்)

மீண்டும் இரத்த வெள்ளம் ஓடாதிருக்கவும் இன்னொரு தடவை அந்நியத்தலையீடு ஏற்படாது தடுக்கவும் உள்ள ஒரே வழி இனப்பிரச்னைக்கு நியாயமான அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என்பதையே எமது கட்சி வலியுறுத்துகின்றது.

மேதினம் தொடர்பாக இலங்கை கம்யூனிஸ்ட்கட்சி (இடது) வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

நமது நாட்டிற்குள் புகுந்து வடக்கு கிழக்கில் தமிழ்பேசும் மக்கள் மீது பாரிய ராணுவ அடக்குமுறையைக் கட்டவிழ்த்து நாட்டின் சுதந்திரம் சுயாதிபத்திற்கு அச்சுறுத்தலாக இருந்து வந்த இந்திய ராணுவம் வெளியேற்றப்பட்ட புதிய சூழலிலேயே இவ்வாண்டு மேதினத்தை நாம் அணிவகும் எதிர்கொள்கின்றோம். இந்தியப்படை வெளியேற்றப்பட்டாலும் அப்படை வருவதற்கு சாட்டாக அமைந்த இனப்பிரச்சனைக்கு குறைந்த பட்சத் தீர்வு எட்டப்படவில்லை. பேச்சுவார்த்தை ஆரம்ப நிலையிலேயே உள்ளன. கடந்த காலங்களைப் போன்று இழுத்தடிப்பு ஏமாற்றுதல் முட்டுக்கட்டையிடுதல்தமதுமுடிவைத் திணிக்க முற்படுவது போன்ற செயல்களில் ஈடுபடாது அரசு ஆக்கபூர்வமான வழிகளில் பேச்சுவார்த்தையை முன்னெடுக்க வேண்டும்.

இன்றைய யூ.என்.பி. அரசு பதவிக்கு வந்து பதின்மூன்று வருடங்களைப் பூர்த்திசெய்துள்ளது. அது பின்பற்றிய பொருளாதாரக் கொள்கை முற்று முழுதாக நாட்டை அந்நிய ஏகபோகக் கம்பனிகளுக்கு அடிபணியச் செய்து நவகாலனித்துவ அடிமைத்தனத்துடன் இறுகப் பிணைத்துவிட்டது. கவர்ச்சி மிக்க திறந்த பொருளாதாரக் கொள்கையாலும், தாராள இறக்குமதியாலும் ஏற்பட்டுள்ள மோசமான விளைவுகளை இன்று நாடுகண்டு அனுபவித்து வருகின்றது. அத்துடன் உலக வங்கி, சர்வதேச நாணயசபை என்பனவற்றின் ஆணைகளுக்கு அடிபணிந்து செயல்படுவதினாலும் அரசு மக்கள் மீது சுமைகளுக்கு மேல் சுமைகளை ஏற்றி வருகின்றது. விலைவாசி உயர்வினால் வாழ்க்கைத் தரம் வீழ்ச்சியடைந்து வருகின்றது. வாழ்க்கைச்செலவின் அதிகரிப்புச்கு ஏற்ற சம்பள உயர்வுபற்றி அரசு மௌனமாகவே இருந்து வருகின்றது. அதே வேளை வெளிநாட்டு ஏகபோகக்கம்பனிகளும் உள்நாட்டுதரகுமுதலாளிகளும் கொள்ளை லாபத்தைப் பெருக்கி வருகின்றனர். ஆதலால் விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தி சம்பளஉயர்வை வழங்கு என்ற கோரிக்கையை உழைக்கும் வர்க்கம் சார்பாக எமதுகட்சி முன்வைக்கின்றது.

தன்னுடையபொருளாதார அரசியல் நடவடிக்கைகளுக்கு எதிராக மக்கள் கிளர்ந்து வருவதைத் தடுப்பதற்கு முன்நடவடிக்கையாகவே ஜனநாயக தொழிற்சங்க விரோதச் சட்டங்களை இந்தஅரசு கொண்டு வந்தது. அது படிப்படியாக வளர்க்கப்பட்டு அடிப்படை மனித உரிமைகளை அப்பட்டமாகவே மீறிநடப்பதற்குவழி தேடப்பட்டது. இனம்காணப்பட முடியாத துணைப்படைகளும், உரிமை கோரப்படாத கொலைகளும் மூலைமுடுக்கெல்லாம் காணப்படுகின்றன. இவை யாவும் அடிப்படைஜனநாயக மனித உரிமைகளுக்கு வேட்டு வைப்பனவாகவே உள்ளன. வாய் நிறைய ஜனநாயகப் பேச்சும் செயலில் ஜனநாயக-மனிதஉரிமை மீறல்கள் என்ற நிலையிலேயே அரசு சென்று கொண்டிருக்கின்றது எனவே அடிப்படைஜனநாயக மனித உரிமைகளை நிலை நாட்டக்கோரும் கோரிக்கையை எமது கட்சி வலியுறுத்துகின்றது. இந்த மூன்றுகோரிக்கையையும் இவ்வாண்டு மேதினத்தில் உழைக்கும் மக்கள் சார்பாக எமது கட்சி முன்வைத்து மக்கள் இயக்கங்கள் மூலம் இவற்றை முன்னெடுக்க சகல ஜனநாயக முற்போக்கு தேசபக்த சக்திகளும் முன்வரல் வேண்டுமென அறைகூவல் விடுக்கின்றது.

## இப்படியும் நடக்கிறது

அண்மையில் பேராதனைப் பல்கலைக்கழகம் நடத்திய முதல் விஞ்ஞானத்தேர்வு (வெளிவாரி) தூய கணிதம் பரீட்சையில் (தமிழ்மொழி மூலம்) முக்கியமான பிழைகள் இருப்பதாக எமக்குப் புகார் கிடைத்திருக்கிறது.

மொத்தம் ஒன்பது வினக்கள் கொடுக்கப்பட்டு ஆறு வினக்களுக்கு விடை அளிக்குமாறு கோரப்பட்டிருந்தது. இந்த வினக்களில், சுலபமாக பதிலளிக்கக்கூடிய ஐந்தாவது வினவில் தான் பிழை இருந்ததாம்.

இது மட்டுமல்ல தமிழ் மொழிபெயர்ப்பிலும் பிழைகள் மலிந்திருந்ததாம்.

''இந்தப் பரீட்சையில் நன்றாகச் செய்திருந்தாலும் எதிர்பார்க்கப்படும் புள்ளிகள் நிச்சயம் கிடைக்காது'' என்று திட்டவட்டமாகக் கூறுகிறார், சம்பந்தப்பட்ட மாணவர்!

இதற்கு மாற்றுவழிதான் என்ன?

'ஊடுருவி'

## முச்சந்தி

(4ம் பக்கத் தொடர்ச்சி)

நானும் ஒத்துக்கொள்கிறேன். சாப்பாடடுக்கு வழி இல்லாத ஏழைச்சனங்களுக்கு ஒரு கொஞ்சமாகவென்றாலும் சாப்பிடுவதற்கு அரசாங்கம் முத்திரையை கொடுத்தால் இவர்கள் லாபம் பெறுகிறதுக்காக இப்படிச்செய்யுறாங்கள். சேவை மனப்பான்மை இல்லாமல் போகின்றது. கூட்டுறவின் மகத்துவம் மங்கி விடுகிறது. மக்களிடையே ஊழல் ஸ்தாபனமென்றகருத்துநிலவுகிறது. இப்பொழுது கூட்டுறவாளருக்கு கூட்டம்கூடி சில கட்டுப்பாடுகள் விதிக்கிறார்கள். இனிமேல் தான் கூட்டுறவின் உண்மைநிலை மக்களுக்குபுரியப்போகுது.

கூட்டுறவு தொழிற்சங்கவாதியொருவர் (பெயர் வெளியிட விரும்பவில்லை) இவரிடம் சென்று கேட்டோம்.

''கூட்டுறவுச் சங்கம் சில ஊழியர்களால் ஊழல்ஸ்தாபனமாக மக்களிடையே தென்படுகிறது. அதற்குக் காரணம் முகாமையாளர்கள் சங்கக்கடையிலுள்ள சாமான்களை விற்றுப் பணத்தைத் தாங்களே எடுத்துக்கொள்வார்கள். இந்த விடயத்தில் தலைமைக்காரியாலய படிவங்கள் மாத்திரம் வடிவாகச்செய்வார்கள். இந்த ஊழல்களை அடிக்கடி இருப்பு என்று கவனித்துக்கொள்வது முகாமையின் பணி.''

''கூட்டுறவு ஊழியர்களுக்கு 'லீகேஜ்' அடிக்கடி வருகிறது. சில நேரங்களில் மா கொட்டுண்டுபோகும். அரிசி எலி தின்னும். சட்டப்படி சொற்ப 'லீகேச்' வழங்கலாமென்று இருக்கு. அதுக்கு சில சங்கங்கள் கருணை காட்டுது. சில சங்கங்களில் இல்லை. இதில் முகாமை கொஞ்சம் ஈவிரக்கத்தோடு அணுகவேண்டும்.''

''கூட்டுறத்துறையை நல்ல ஸ்தாபனமாக ஆக்கவேண்டுமானால் நல்ல பணிப்பாளர் சபை தெரியவேண்டும். இப்பவெல்லாம் பணிப்பாளர் சபை திறமைக்கு முக்கியத்துவம் கொடுக்கிறதில்ல. நேர்மைக்கு முக்கியத்துவம் கொடுக்கிறதில்ல... சொந்தக்காரங்கள்... தங்களுக்கு ஏதும் அனுகூலங்கள் கிடைப்பவர்கள்...இவர்களைப் பார்த்து தெரிவு செய்துவிடுகிறார்கள்... அவங்களால் கூட்டுறவுத்துறையின் மகத்துவம் போய்விடுகிறது.

என்னைப் பொறுத்தளவில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒண்டு சொல்கிறன்...நாடு இப்ப கொஞ்சம் சீராக வந்துவிட்டது. கொழும்பில போய் சாமான்களை கொள்முதல் செய்து மக்களுக்கு குறைந்த விலையில் பொருள்களை வழங்கவேணும் உள்ளூரில் கொள்முதல் செய்வதால்தான் ஊழல் மலிந்து விடுகிறது'' என்றார்.

—மணிசேகரன்

## கெரில்லாக்கள்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

எதுவித தகவல்களையும் வெளியிடவில்லை. எனினும் இச்சம்வங்களை பாகிஸ்தான் ஊர்ஜிதப்படுத்தியுள்ளது.

மேற்படி இருதாக்குதல்களையும் அடுத்து கரிசன் நகர்ப்புற விமான நிலையத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதுடன் இவ்விமான நிலையத்தில் விமானங்கள் இறங்குவதையும் ஆப்கான் அரசு தற்காலிகமாக தடைசெய்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

(கி)

## காட்டிலிருந்த போராளிகளுக்கு தேனிசை செல்லப்பாவின் இசை உற்சாகமூட்டியது

- டொமினிக்

(யாழ்ப்பாணம்)

காட்டில் இருந்த போராளிகளுக்கு உற்சாகம் மூட்டி மேலும் எதிரிகளோடு போர் புரிய வைப்பதற்கு தேனிசை செல்லப்பாவின் இசை நிகழ்ச்சிகள் முக்கியமாக இருந்தன''

இவ்வாறு யாழ் முற்றவெளி மைதானத்தில் நடைபெற்ற தேனிசை செல்லப்பாவின் இசை நிகழ்ச்சிக்கு தலைமை வகித்து பேசும் போது தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி யாழ் மாவட்ட பொறுப்பாளர் திரு. டொமினிக் கூறினார்.

திரு. டொமினிக் மேலும் பேசுகையில் ''மே 25ம் திகதி குச்சவெளியில் எமது இரண்டாவது லெப்டினன்ட் றெஜினோல்ட் வீரமரணமடைந்த அந்த நேரத்தில் போராளி பதுமன் ஒரு பாடல் பாடினார் இயற்கையாகவே எமது போராளிகளுக்கு கவித்துவம் வந்து விடுகின்றது. கவிஞர் காசி ஆனந்தன் கூட பதினேழு வருடங்கள் தான் எழுச்சிப் பாடல்கள் பாடினார். தேனிசை செல்லப்பா கடந்த முப்பது ஆண்டுகளாக தமிழ்ஈழ விடுதலைப்புலிகளுக்காக எழுச்சிப் பாடல்களை பாடினார் என்று குறிப்பிட்டார்.

(152)

## ஆசிரிய பயிலுநர்களுக்கான திசைகோள் உறுப்பினர் வகுப்புகள்

(உடுவில்)

ஆசிரியர் பயிலுநர்களுக்கான திசைகோள் உறுத்தல் 2-ம் கட்ட வகுப்புக்கள் மே மாதம் 5, 6, 19-ம் திகதிகளிலும், யூன் மாதம் 2ம், 3ம், 16ம் திகதிகளிலும் நடைபெறும் என யாழ்ப்பாணம் கல்வித்திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

திசைகோள் வகுப்புக்கள் நடைபெறும்கோட்டம் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் வகுப்பு நடைபெறும் நிலையங்கள் பொறுப்பதிகாரிகள் விபரம் வருமாறு: யாழ்ப்பாணக் கோட்டம்: யாழ்ப்பாணபிரிவு வேம்படி மகளிர் கல்லூரி திரு. இ. சிவானந்தன் கல்வி அதிகாரி யாழ்ப்பாணம்.

நல்லூர் பிரிவு யாழ். இந்து மகளிர் கல்லூரி திரு. என். தணிகாசலம்பிள்ளை கல்வி அலுவலர் யாழ். கல்வித்திணைக்களம்.

சாவகச்சேரி பிரிவு றிபேக் கல்லூரி ஜனப் எஸ். ஏ. சி. இனுை.

வேலணைக் கோட்டம்; வேலணை நெடுந்தீவு, ஊர்காவற்றுறைப்பிரிவு:சேர் வைத்திலிங்கம் துரைசாமி மத்திய மகாவித்தியாலயம் திரு. சி. புலேந்திரன் உதவிக் கல்விப் பணிப்பாளர் வேலணை.

பண்டத்தரிப்புக் கோட்டம் சண்டிலிப்பாய் பிரிவு பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, திரு. இ. சிவானந்தன் உதவிக்கல்விப்பணிப்பாளர் பண்டத்தரிப்பு.

தெல்லிப்பழை பிரிவு மகாஜனக் கல்லூரி திரு. எஸ். சிவசரவணபவன் அதிபர் வைத்தீஸ்வராக் கல்லூரி. சங்கானை பிரிவு வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி திரு.பி. உமாபதிசிவம் ஆசிரியர் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி.

மருதனமடம் கோட்டம்; கோப்பாய்ப் பிரிவு இராமநாதன் கல்லூரி திரு. ஆர். கே. குலசேகரம் உதவிக் கல்விப் பணிப்பாளர் மருதனுமடம்.

உடுவில் பிரிவு: மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை. திரு. ஏ. பஞ்சலிங்கம், அதிபர் கொக்குவில் இந்துக் கல்லூரி.

வடமராட்சிக் கோட்டம்: பருத்தித்துறை பிரிவு வட இந்துமகளிர் கல்லூரி (திரு. எஸ். செல்லத்துரை கோட்டக் கல்வி அலுவலர் வடமராட்சி) கரவெட்டி பிரிவு: நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், திரு. எஸ். சிவராசா கல்வி அலுவலர்யாழ். கல்வித்திணைக்களம்.

பருத்தித்துறைபிரிவு வேலாயுதம் மத்திய மகாவித்தியாலயம் திரு. கே. மகேசன் கல்வி அலுவலர் பண்டத்தரிப்புக் கோட்டம்.

## சமாதான நீதவான்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கிழக்கு விவாகப் பதிவாளரும்,கோப்பாய் பிரிவு பிறப்பு, இறப்பு பதிவாளருமான திருமதி யோகீஸ்வரி ஸ்ரீவரதராஜன், யாழ்.மாவட்டத்திற்கான சமாதான நீதிவானுக நீதி அமைச்சரினுல் நியமிக்கப்பட்டுள்ளார். 23-ம் திகதி திங்கட்கிழமை மாவட்ட நீதிபதி திரு. பொ. பாலவடிவேல் முன்னிலையில் இவர் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

கோப்பாய் கிறீஸ்தவ கல்லூரியின் பழையமாணவியான இவர் கோப்பாயைச் சேர்ந்த முன்னாள் பதிவாளர் சு. சுப்பிரமணியம் (ஜே.பி.) அவர்களது புதல்வியுமாவார்.

## கொடிகாமத்தில் உதவி அரச அதிபரின் சுற்றுலா செயலகம்

(தென்மராட்சி)

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர்பணிகளில் ஒரு பகுதி கொடிகாமத்திலுள்ள கச்சாய் பிரதேசபையில்உள்ள உதவி அரசாங்க அதிபர் சுற்றுலா செயலகத்தில் இயங்க ஆரம்பிக்கப்பட்ட பின்னர் தென்மராட்சிகிழக்குமக்களின் தேவைகள் தாமதமின்றி கவனிக்கப்பட்டுவருகின்றன.

வாரத்தில் திங்கள்,வெள்ளி ஆகிய இருதினங்களில் இச்சுற்றுலா செயலகம் காலை 9 மணி முதல் மாலை 4 மணிவரை இயங்கிவருகின்றது.

உதவி அரசாங்க அதிபர் திரு. பு. சுந்தரம்பிள்ளை சாவகச்சேரி காரியாலய ஆளணி உதவியாளர் திரு. சரவணமுத்து தென்மராட்சி கிழக்கு கிராம சேவையாளர்கள் ஆகியோர் இங்கு பணியாற்றிவருகின்றனர்,

மீளக் குடியமர்தல் நிவாரணம் இரண்டாயிரம், சுயதொழில் பாதிப்பு நிவாரணம் பெற்றுக்கொள்ளாத அநேகர் இதற்கான மேல் முறையீட்டு விண்ணப்பங்களை அதற்குரிய அத்தாட்சிப் பிரதிகளைக்காட்டி இக்காரியாலயத்தில் சமர்ப்பித்தனர்.

(81)

# "சுதந்திரம் பெற தொடர்ந்து போராட வேண்டும்"

(கிளிநொச்சி)

''தமிழ் மக்கள் சுதந்திரம் பெற்று வாழ, அனைவரும் தொடர்ந்து போராட முன்வரவேண்டும்.'' என்று கிளிநொச்சி வஞ்ஞானக்கல்வி நிலையத்தில் நடைபெற்ற தமிழ் ஈழ விடுதலைப் போராட்டம் சம்பந்தமான போட்டியின் பரிசளிப்பு விழாவில் பரிசில் வழங்கி சிறப்புரையாற்றுகையில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி கிளிநொச்சி மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. கோபி குறிப்பிட்டார்.

அன்னை பூபதி. கணபதிப்பிள்ளை நினைவாக நடைபெற்ற இப் போட்டியில் ஐநூறு மாணவர்கள் கலந்துகொண்டனர். இவ்விழாவில பிரதம விருந்தினராக விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி கிளிநொச்சி நகர் சிற்றூர் அவைச் செயலாளர் டாகடர் கே. வி கே. திருலோகமூர்த்தி கலந்துகொண்டு உரையாற்றினுர். ஆயிரத்துக்குமதிகமான மாணவர்கள் விழாவில் கலந்து சிறப்பித்தனர். (83)

## புலிகள் தபால் பெட்டி

(மட்டக்களப்பு)

பொதுமக்கள் தமது கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு வசதியாக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரால் தபால் பெட்டி ஒன்று மட்டக்களப்பு நகரில் வைக்கப்பட்டுள்ளது.

## விசேட கூட்டம்

(ஆனைக்கோட்டை)

கல்வி ஊழியர்களின் மட்டுப்படுத்தப்பட்ட கூட்டுறவு சிக்கனக் கடனுதவிச் சங்கத்தின் முகாமைச் சபை உறுப்பினர்களின் விசேட கூட்டம் எதிர்வரும் 29ம் திகதி நடைபெறவிருக்கிறது. இக்கூட்டத்தில் வட பிரதேச பிரதிநிதிகளாகத் திருவாளர்கள் ந. சிவபாதம், க. இராஜகோபால், எஸ். அப்பாபிள்ளை எஸ். சி. எஸ். சிதம்பரநாதன் ஆகியோர் கலந்துகொள்கின்ருர்கள். (139)

## சிப்பி அரிப்பிஞல்

# வயல் நிலப் பகுதிக்குள் கடல்நீர் புகும் அபாயம்

(மானிப்பாய்)

யாழ். கல்லுண்டாய் வீதியில் சிற்பி அரிப்பதனுல் கடல் நீர் வயல் நிலங்களுக்குள் புகும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி விவசாயிகள் புகார் தெரிவித்துள்ளனர்.

இது சம்பந்தமாக அப்பகுதி விவசாயிகள் சுமார் 64 பேர் யாழ் மாவட்ட அரசாங்க அதிபரும் மற்றும் உடுவில் கமநல சேவை நிலையத்திற்கும் மக்கள் விடுதலை முன்னணியினருக்கும் மகஜர்களை அனுப்பியுள்ளனர். இம்மகஜரில் குறிப்பிடப் பட்டுள்ளதாவது:

ஆனைக்கோட்டை கல்லுண்டாய்வீதிக்கு தெற்கே தரவை நிலமும் அதையடுத்து கடலும் இருக்கின்றது. வடக்கே கம நிலங்கள் இருக்கின்றது. இந்த கமங்களைச் செய்பவர்கள் 20 நாட்களுக்கொருமுறை உழுது உவர்மேலிடாதவாறு கோடை 6 மாதமும் கஷ்டப்பட்டே ஆவணியில் நெல் விதைப்பார்கள். மழை இல்லாதுவிடில் நெல்விளையமாட்டாது.

இக் கமத்தை நம்பிவாழும் பெரும்பகுதியினருக்கு கடந்த பல வருடங்களாக தீர்க்க முடியாத பரச்சனை உருவாகியுள்ளது அதாவது கடலுக்கும் ரோட்டுக்கும் இடைப்பட்ட அரசாங்க தரவை நிலத்தில் சிப்பி அகழ்வதாலும், சிப்பிக்காகக் கிண்டி அரித்த மண்ணை இரவு வேளையில் லொறிகளிலும், டிராக்ரர்களிலும் ஏற்றிச் செல்கின்ருர்கள் இதனுல் கடல்நீர் தற்போதுரோட்டுக்கு அண்மையில் வந்துள்ளது. தொடர்ந்தும்இச்செயல் நிகழுமாயின் இன்னும் சில மாதங்களில் வயல் நிலங்களுக்குள் கடலநீர் புகுந்துவிடும். இது பற்றி நாம் பலதடவைகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் எடுத்துரைத்தும் இது வரை நடவடிக்கைஎடுக்கப்படவில்லை.

எமது இப்பிரச்சனைக்கு உடன் பரிகாரம் தேடித்தருமாறு கேட்டுக்கொள்கிறேம். (71)

## மீண்டும் இடமாற்றம்

(பருத்தித்துறை)

வடமராட்சிப் பகுதியில் உள்ள ஆறுகிராம சேவை அலுவலர்களுக்கு இம்மாதம் 16ம் திகதியிலிருந்து மீண்டும் இடமாற்றம் ஒன்று செய்யப்பட்டுள்ளது.

என். பாலசுந்தரம் கெருடாவில் கிழக்கு-நாகர்கோவில் கிழக்கு. கே. பாலச்சந்திரன் நாகர்கோவில் கிழக்கிலிருந்து கெருடாவில் கிழக்குக்கும், கே. வி. சந்திரலிங்கம் துன்னுலை மேற்கிலிருந்து பொலிகண்டி மேற்கிற்கும், கே. ஜெயசீலன் வல்வெட்டித்துறை வடமத்தியிலிருந்து துன்னுலை கிழக்குக்கும் கே. சண்முகநாதன் புலோலி வடமேற்கிலிருந்து புலோலி மத்திக்கும், எஸ் நாகதீபசொருபன் புலோலி மத்தியிலிருந்து புலோலி வடமேற்குக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (52)

## நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை மேற்கு வதிரி பீட ஸ்ரீ மன்றுளாடும் பெருமான் விநாயகமூர்த்திப் பிள்ளையார் தேவஸ்தான மகா சபைக் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: பொ. சண்முகநாதன், துணைத்தலைவர்கள்: மு. கனகசபை, ச. நாகேஸ்வரன், செயலாளர்: ந. வி. சரவணமுத்து, துணைச்செயலாளர்: பொ. சிவப்பிரகாசம், பொருளாளர்: ச. திருநாவுக்கரசு, செயற்குழு உறுப்பினர்கள்: பொ. சிவலோகநாதன், க. நகுலேஸ்வரன், சு. பொ. நல்லைநாதன், இ. பரராசசிங்கம், கு. நடராசா, செ. கந்தசாமி, ச. முருகையா, யோ. சிவகுமார், சி. தேவகுமார். முன்னர் தெரிவான மேற்குறித்த தேவஸ்தான நிர்வாக சபை கடந்த ஒரு வருட காலமாக இயங்காதிருந்தது குறிப்பிடத்தக்கது.

ஃ ஃ ஃ

(நெல்லியடி)

வதிரி தமிழ் மன்றத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: எஸ். தங்கராசா இணைத்தலைவர்கள்: இ. செல்வநாதன், வி. இராஜேஸ்வரன், பொதுச்செயலாளர்: சி. க. இராசேந்திரன், நிர்வாகச் செயலாளர்: என். ரகு, பொருளாளர்: எஸ். இரத்தின நேசன். (55)

## இராசி பலன்

**25-04- 1990**

**புதன்கிழமை**

மேடம்: உடல் உபாதை வீண்யோசனை, புதிய திட்டம் சுபகாரியச் செலவு, நல்லவர் வருகை.

இடபம்: சமூக சேவை, அலைச்சல் சாஸ்திர விருப்பு, குடும்பசுகம்.

மிதுனம்: அன்புடமை நீசர் உதவி குடும்பசுகம், விரயம்.

கடகம்: உழைப்பு, வாகன சுகம், தனச்சிந்தை ஆலயதரிசனம், நிதானமாக நடத்தல்.

சிங்கம்: பகைமை, தெய்வ வழிபாடு, பயம், கடன்வரவு, வைத்தியச்செலவு.

கன்னி: சுகவாழ்வு, இடாம்பீகம் ஏமாற்றம், வாகனசுகம் நல்லவர் உதவி.

துலாம்: பிதாவழியினர் உதவி, மனநின்மதி உழைப்பு, கடன்தொல்லை, சுகம்.

விருச்சிகம்; பணப்புழக்கம் தந்திரச்செயல், வீண்பழிகேட்டல், வைத்தியம்.

தனுசு: இனசனவரவு, எதிர்ப்பு, நன்மதிப்புஉழைப்பு வைத்தியச் செலவு.

மகரம்; அலைச்சல், போசனக்குறை, வீண்மனப்போராட்டம், இடாம்பீகம்.

கும்பம்: அதிக உழைப்பு, கற்பனை, தந்திரம், இடாம்பீகம் உறவினர் உதவி.

மீனம்: அயலவர் தொந்தரவு, கடினவாக்கு, கடன் வரவு, வீண்பழிகேட்டல்.

இ. மகாதேவா

## பயிற்சி நெறிகள்

(உடுவில்)

யாழ்ப்பாணம் முறைசாராக் கல்விப் பிரிவின் கீழ் மருதனுமடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்று வரும் ஹோட்டல் முகாமைதுவம், விவசாய விஞ்ஞானம் ஆகிய பயிற்சி நெறிகளுக்கு புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கான போதனை வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன.

விவசாயப் பயிற்சி நெறிக்கு மிகக் கூடுதலான விண்ணப்பங்கள் கிடைத்தமையைத் தொடர்ந்து இம்முறை எண்பதுக்கும் அதிகமான மாணவர்கள் இப் பயிற்சி நெறிக்கென தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (109)

# மன்னர் செய்திகள்

(மன்னர்)

மன்னரில் மீண்டும் பெற்ருேலுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. கடந்த செவ்வாய் முதல் இன்றுவரை பெற்ருேல் விநியோகம் நடைபெறவில்லை. இதனுல் தனியார் வியாபாரிகள் அனுராதபுரம் சென்று பெற்ருேலைக் கொள்வனவு செய்து 1 லீற்றர் 30 ரூபா வீதம் விற்பனை செய்கின்ருர்கள். தினமும் மோட்டார் சைக்கிள்களை பெற்ருேல் தட்டுப்பாட்டினுல் உருட்டிச் செல்கின்ருர்கள்.

0 0

### வயோதிபரின் சடலம்

மன்னர் நகரத்தில் ஒரு வயோதிபரின் சடலம் விடுதலைப் புலிகளால் கண்டுபிடிக்கப்பட்டு மன்னர் நகர கிராம சேவை அலுவர் திரு. சி. எஸ். பிலிப்புபிள்ளையிடம் ஒப்படைக்கப்பட்டது. மைக்கல் அன்ரனி வயது 74 (அம்மான்) என்பவரே இந்த வயோதிபராவார். வயோதிபம் காரணமாக இறந்த இவரை கிராம சேவையாளர் பொறுப்பேற்று அரச செலவில் அடக்கம் செய்தார்.

0 0

### பணிப்பாளர்

சேவையிலிருந்து ஓய்வு பெற்ற முன்னுள் மன்னர் யாழ்ப்பாணம் அரச அதிபர் திரு. எஸ். எஸ். தர்மபாலன் தற்சமயம் கெயர் நிறுவனத்தின் வடக்கு-கிழக்கு மாகாணங்களின் பணிப்பாளராக கடமை ஏற்றுள்ளார்.

அண்மையில் இவர் மன்னரில் ஆட்காட்டிவெளி, நானுட்டான், உயிலங்குளம் போன்ற இடங்களுக்குச் சென்று நெற்காணிகளையும், கமத்தொழில் சேவை நிலையங்களையும் பார்வையிட்டு, நிலையங்களில் போதிய களஞ்சிய சாலை இல்லை என்பதை அவதானித்து புதிய களஞ்சிய சாலைகளை நிறுவுவதற்கு வசதிகள் செய்ய முடிவுசெய்துள்ளார். இவருடன் அரச அதிபர் திரு. ஏ. சி. செபநாயகம், திட்டப்பணிப்பாளர் திரு. கே. கணேஸ் ஆகியோரும் சென்றிருந்தனர்.

0 0

### பயிற்சிகள்

மன்னர் லசேலியன் அபிவிருத்தி நிலையம் அகில உலக கெயர் மரவேலைப் பயிற்சிகளை மன்னரில் 15 வயதுக்கு மேற்பட்ட தகுதியுடைய இளைஞர்களுக்குப் பயிற்சியளிக்க முன்வந்துள்ளன. இந்த பயிற்சி வகுப்பு இரண்டரை மாதம் நடைபெறும். பயிற்சிச் காலத்தில் 600 ரூபா ஊக்குவிப்புப் பணமாக வழங்கப்படும். வெளியிட மாணவர்களுக்கு தங்குமிடம், உணவுவசதிகள் அளிக்கப்படும். இப்பயிற்சியை இந்த அபிவிருத்தி நிலையம் கெயர் நிறுவனத்தின் உதவியுடன் செய்கின்றது. பயிற்சி முடிவு பெற்றதும் தேசிய அடிப்படையில் அரச சான்றிதழ் வழங்கப்படும். இதற்கான ஏற்பாடுகளை நிர்வாக இயக்குநர் சலோதரர் செல்வதாஸ் மேற்கொண்டு வருகின்ருர்.

0 0

### நியமனம்

மன்னர் கச்சேரிக்கு புதிய கணக்காளராகத் திரு. சந்திரகுமார் நியமனம் பெற்றுள்ளார். முன்னர் கணக்காளராகக் கடமையாற்றிய திரு. சபாபதிப்பிள்ளை யாழ். சுகாதார அலுவலகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

0 0

### பிறப்புச் சான்றிதழ்

மன்னர் நகரத்தில் உள்ள 'மன்னர் கிளினிக்' (வைத்திய நிலையம்) அங்கு பிறக்கும் குழந்தைகளின் பிறப்புச் சான்றிதழ்களை உடனுக்குடன் வழங்கி வருகின்றது. இந்த வைத்தியசாலையின் வைத்தியர் கலாநிதி கதிர்காமநாதன் மன்னர் நகர மருத்துவப் பதிவாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

0 0

### பயிலுனர் ஆசிரியர்

அண்மையில் மன்னர் மாவட்டத்தில் நியமனம் செய்யப்பட்ட பயிலுனர் ஆசிரியர்களில் மூன்று பேர் சிங்கள ஆசிரியர்களாகும். இவர்கள் தலைமன்னர், மன்னர் சுல்சுவார், தம்பபண்ணி ஆகிய பாடசாலைகளில் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். இன்னும் இரண்டு பேர் நியமனம் பெறுவார்கள் என மன்னர் சிங்கள கல்வி அதிகாரி ஜனுப் ஐ.எம். தாக தெரிவித்தார்.

### பதில் கல்விப் பணிப்பாளர்

மன்னர் முன்னுள் கல்விப் பணிப்பாளர் திரு. ஆர். சுந்தரலிங்கம் பதவிஉயர்வுபெற்று யாழ்ப்பாணம் கல்விப் பணிப்பாளராக சென்றதையடுத்து மன்னருக்கு புதிய கல்விப் பணிப்பாளர் வரும்வரை, பதில் பிரதேசக் கல்விப் பணிப்பாளராக சிரேஷ்ட பிரதம கல்வி அதிகாரி ஜனுப் சற். ஏ. ரகீம் கடமையாற்றுகின்ருர்.

# "இறைவனிடம் கிடைக்கும் சாந்தம், இனிமை, மனநிறைவு சங்கீதத்திலும் கிடைக்கிறது"

(உடுவில்)

''சிந்தையில் சாந்தி பெறுவது தான் சங்கீதத்தின் முக்கிய நோக்கம். சாந்தியானது உண்மையில் இறைவனின் இரு திருவடிகளில் போய் சேரும்போதுதான் ஏற்படுகின்றது. அமைதி ஏற்படுகின்றது. இறைவனின் பாதாரவிந்தங்கள் இரண்டும் மிகுந்த குளிர்ச்சி வாய்ந்தன. அந்தக் குளிர்ச்சியான இடத்தில் நாம் இருக்கும்போது எங்களுக்கு சாந்தம் ஏற்படுகின்றது. இறைவனின் கழலடியில் கிடைக்கும் சாந்தம், இனிமை, மனநிறைவு இந்த சங்கீதத்திலும் கிடைக்கிறது.''

யாழ்ப்பாணம் பாரதிகான சபாவின் முதலாவது ஆண்டு விழாவில் உரையாற்றிய இணுவில் சாஸ்தா குருகுல அதிபர் சிவஸ்ரீ தா. மஹாதேவக் குருக்கள் இவ்வாறு கூறினுர்.

வயலின் வித்துவான் பிரம்மஸ்ரீ எஸ். சர்வேஸ்வர சர்மாவின் இல்லத்தில் நடைபெற்ற பாரதிகான சபா ஆண்டுவிழாவில் பிரம்மஸ்ரீ தா. மஹாதேவக்குருக்கள் மேலும் கூறியதாவது: உடலுக்கு இன்பம் தரவல்ல பல நிகழ்ச்சிகள் உள. நல்ல நிலா ஒளியில் குளிர்ச்சியை அனுபவிப்பதில் இன்பம் கிடைக்கிறது. அதேபோல இளம் வெய்யிலின் உஷ்ணத்தை அனுபவிப்பதிலும் சுகம் கிடைக்கிறது. குளிர்ச்சியான தடாகத்தில், சுகமாகவீசும் தென்றலில் பல இன்பம் கிடைக்கிறது. இச் சுபானுபவங்கள் எல்லாவற்றையும் மிஞ்சியது குறைவற்ற வீணையின் ஓசையைக் கேட்கும் இன்பம். இவ்வோசை இன்பமயமானது. இறைவனின் திருவடி நீழலில் கிடைக்கும் இன்பத்துக்குச் சமமானது. வீணையின் நாதம் இறைவனின் பக்கத்தில் இருக்கும் இன்பத்தை நமக்குத் தருகிறது.

சங்கீதத்துக்குதோற்றுவாயாக இருப்பவர் அம்பிகையேதான். சங்கீதத்துக்கு சட்ஜக்கிராமம், மத்தியக்கிராமம், ஆதாரக்கிராமம் என மூன்றுவித பலன்கள் இருக்கின்றன. அம்பிகையின் கழுத்தில் அவை மூன்றும் மூன்று ரேகைகளாக விளங்குகின்றன. இந்த மூன்று ரேகைகளிலிருந்து தான் சங்கீதத்தின் அடித்தளமாகிய சகல ராகங்களும் தோன்றுகின்றன. சரிகமபதநி என்ற ஏழு ஸ்வரங்களும் அம்பிகையின் உருவத்திலிருந்து பிறப்பன.

இத்தகைய பெருமைவாய்ந்த சங்கீதத்தை பயில்வதன் மூலம் நாம் இன்பம், சுகம், சாந்தி ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

விழாவில் சங்கீத மும்மூர்த்திகள் ஆராதனை நடைபெற்று வளரும் கலைஞர்கள், வித்துவான்கள் ஆகியோரின் கீர்த்தனஞ்சலியும் இடம்பெற்றது. (109)

# மாணவர் அமைப்புக்குழுவின் கவிதைகட்டுரைபோட்டிமுடிவு

(நாவற்குழி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தென்மராட்சிப் பிரதேச மாணவர் அமைப்புக்குழு கொத்தணி மட்டததில் பாடசாலை மாணவர்களுக்காக நடத்திய கவிதை, கட்டுரைப் போட்டிகளில் சாவகச்சேரி நகர் கொத்தணியில் வெற்றி பெற்ற மாணவர்கள் விபரம் வருமாறு;

## கட்டுரைப் போட்டி

கீழ்ப்பிரிவு 1. செ. சுவர்ணலதா சாவகச்சேரி மகளிர் கல்லூரி, 2. ஆர். ஜெயசன் டிறிபேக் கல்லூரி, 3. சி. சிவகாந்தன் டிறிபேக் கல்லூரி. மத்திய பிரிவு: 1. இராச இராசினி சாவகச்சேரி மகளிர் கல்லூரி, 2. வ. யோகானந்தம் டிறிபேக் கல்லூரி, 3. பா, காயத்திரி டிறிபேக் கல்லூா. மேற்பிரிவு: 1. சத்தியபாமா சாவகச்சேரி மகளிர் கல்லூரி, 2. க. மாலதி சாவகச்சேரி மகளிர் கல்லூரி, 3. பரமேஸ்வரி சாவகச்சேரி மகளிர் கல்லூரி. ஆரம்ப பிரிவு: 1. ஆ. செந்தூரன் சாவகச்சேரி மகளிர் கல்லூரி, 2. ம. மைக்கல் நளினி றிபேக் கல்லூரி, 3. சி. மதிவதனி சாவகச்சேரி.

## மகளிர் கல்லூரி

கவிதைப் போட்டி: மத்திய பிரிவில் முதல் மூன்று இடங்களையும் டிறிபேக் கல்லூரியைச்சேர்ந்த மாணவர்களான அ. இதயலேகா, ச. ஜெயதீஸ்வரன், சி. செந்தில்நாதன் ஆகியோர் பெற்றுக்கொண்டனர். மேற்பிரிவில் மகளிர் கல்லூரியைச் சேர்ந்த கு. நகுலேஸ்வரி முதலாமிடத்தைப் பெற்றுக்கொண்டார்.

## சாவகச்சேரி வடக்கு

சாவகச்சேரி வடக்கு கொத்தணியில் வெற்றிபெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு:

கட்டுரைப் போட்டி ஆரம்ப பிரிவு: 1. க. துஷ்யந்தி சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை. 2. சி. பகீரதன் மீசாலை வீரசிங்கம் ம. வி. 3. மு. ஜெயவனிதா சரசாலை சரஸ்வதி வித்தியாசாலை, கீழ்ப் பிரிவு: 1. க, சுவர்ண சரசாலை சரஸ்வதி வித்தியாசாலை 2. ந, சுமதி மீசாலை வீரசிங்கம் ம. வி. 3. ம விஜிகரன் சரசாலை ஸ்ரீ கணேசா வித்தியாலயம், மத்திய பிரிவு: 1.க. கைலாயநாதன் மீசாலை விக்கினேஸ்வரா ம. வி. 2. நா. கமலநாதன் மீசாலை வீரசிங்கம் ம. வி, 3. கு. சுதர்சினி சரசாலை ஸ்ரீ கணேசா வித்தி. மேற்பிரிவு: 1. ப. பஞ்சலிங்கம் மீசாலை வீரசிங்கம் ம. வி. 2. து. லிகிர்தா சாவகச்சேரி இந்துக்கல்லூரி 3. த. சிவரூபன் மீசாலை வீரசிங்கம் ம. வி. கவிதைப் போட்டி: 1. க. சுபத்திரா சரசாலை ஸ்ரீ கணேசா வித்தி. 2. கு. சுதர்சினி சரசாலை ஸ்ரீ கணேசா வித்தி. 3. பா. பாலறஜனி மீசாலை கமலாம்பிகை வித்தியாசாலை.

## கைதடி கொத்தணி

கைதடிக் கொத்தணியில் வெற்றிபெற்ற மாணவர்கள் விபரம் வருமாறு:

கட்டுரைப்போட்டி: ஆரம்ப பிரிவினர்: 1. நா. பானுமதி கைதடி முத்துக்குமாரசாமி ம.வி. 2. சி. திவ்வியா கோயிலாக்கண்டி மகாலட்சுமி வி., 3. அ. தர்சினி கைதடி முத்துக்குமாரசாமி ம. வி. கீழ்ப்பிரிவில் 1. மு. உமாமாலினி கைதடி நாவற்குழி அ.த.க.பா, 2. வ. செல்வநாயகி கைதடி- நாவற்குழி அ. த.க. பா, 3. இ. ஜெயமதி கைதடி குருசாமி வி, மத்திய பிரிவில் 1. ச. இராசமோகன் நாவற்குழி ம.வி, 2, சு. சிறீதரன் கைதடி முத்துக்குமாரசாமி ம வி, 3. சி. கோமளவதி கைதடி முத்துக்குமாரசாமி ம. வி, மேற்பிரிவு: இரண்டாம், மூன்றும் இடங்களை கைதடி முத்துக்குமாரசாமி ம வி.யைச் சேர்ந்த சே. மதிவதனி, மு. கோமதி, க. அருந்தவராசா ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

கவிதைப் போட்டி: ஆரம்ப பிரிவு: முதல் மூன்று இடங்களையும் கைதடி முத்துக்குமாரசாமி ம. வி. யைச் சேர்ந்த ஆ. நிரஞ்சஞ, ச. கோகுலநாதன், இ. இராதா ஆகியோர் பெற்றுக்கொண்டனர் கீழ்ப்பிரிவு: ச. மகிந்தினி கைதடி முத்துக்குமாரசாமி ம,வி. 2ம், 3ம் இடங்களை கைதடி விக்கினேஸ்வர வித்தியாலயத்தைச் சேர்ந்த செ. வரதீஸ்வரி, சி.நிசாந்தி ஆகியோர் பெற்றுக்கொண்டனர். மத்திய பிரிவில் இரண்டு இடங்களையும் கைதடி முத்துக்குமாரசாமி ம.வி. யைச் சேர்ந்த சி. கோமளவதியும் இ பாஸ்கரனும் பெற்றுக் கொண்டனர். மூன்றும் இடம் ப. விஜயகுமார் கைதடி விக்கினேஸ்வரா வி, மேற்பிரிவில் முதல் மூனறு இடங்களையும் முறையே கைதடி முத்துக்குமாரசாமி ம.வியைச் சேர்ந்த மு. கோமதி, இ. கௌரி. சே.மதிவதனி ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

## மட்டுவில் கொத்தணி

மட்டுவில் கொத்தணியில் வெற்றி பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு:

கட்டுரைப்போட்டி: ஆரம்ப பிரிவில் 1. கு. வனிதா சந்திரபுர ஸ்கந்தவரோதயா கல்லூரி, 2. செ. சாமினி மட்டுவில் அ.த.க,பா. 3. பா. டிலானி சந்திரபுர ஸ்கந்தவரோதயா, கீழ்ப்பிரிவில்: 1. க. சிவகௌரி மட்டுவில் தெற்கு அமெரிக்கன்மிஷன், 2. சி. ரேணுகா சந்திரபுர ஸ்கந்தவரோதயா, 3. ந, ஜெயரூபி மட்டுவில் தெற்கு அ.மி.பா. மத்தியபிரிவில்: 1. செ. பாலேந்திரா சந்திரபுர ஸ்கந்தவரோதயா, 2. க. அமுதா கமலாசினி வி, 3. செ. வரதராணி மட்டுவில் சரஸ்வதி கனிஷ்ட வி, மேற்பிரிவில்: 1. சு. தவரூபி சந்திர ஸ்கந்தவரோதயா கல்லூரி, கவிதைப் போட்டியில் மேற்பிரிவில் மூன்று இடங்களையும் சந்திரபுர ஸ்கந்தவரோதயா மாணவர்களான சு. தவரூபி, க. சிவகௌரி, க. மங்களேஸ்வரி ஆகியோர் பெற்றுக் கொண்டனர். (107)

# விளையாட்டுப் போட்டி பரிசு பெற்றோர் விபரம்

[உடுவில்]

புத்தாண்டு தினத்தையொட்டி வலிகாமம் தெற்கு, உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளுக்கான பரிசுகளை உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் வழங்கினார்.

மருதனுமடம் இராமநாதன் கல்லூரியில் இதனையொட்டி கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. முதல்பரிசுபெற்ற நாட்டுப்பாடல்கள், கவிதைகள், சுன்னுகம் சிவன்சிறுவர் பாடசாலை மாணவ மாணவிகள் திருநெல்வேலிஇராமகிருஷ்ணலைய நுண்கலைக்கல்லூரி மாணவிகள் ஆகியோரின் கலைநிகழ்ச்சிகள் இராமநாதன் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி மாணவிகளின் நாடகங்கள் ஆகியன விழாவில் இடம்பெற்றன.

புத்தாண்டுக் கொண்டாட்டங்களை முன்னிட்டு நடாத்தப்பட்ட போட்டிகளில் பரிசு பெற்றோர் விபரம் வருமாறு:

## கயிறடித்தல்

பொ. லதா இணுவில், நா. பிரியதர்சினி, ஆ. றஜிதாமலர்.

## நாட்டார் பாடல்

(15 வயதுக்கு கீழ்) எஸ். தமிழரசி கந்தரோடை, சு. திருவருட்செல்வி உடுவில் தெற்கு, இ. தமிழரசி இணுவில், (15 வயதுக்கு மேல்) சி. சிவகௌரி இணுவில், சு. தம்பித்துரை உடுவில் தெற்கு, சி. கந்தையா, உடுவில் வடக்கு.

## போர்த் தேங்காய் அடித்தல்

கந்தையா கணேஸ் அளவெட்டி, பொன்னையா தம்பிராசா உடுவில், கணபதிப்பிள்ளை குலசேகரம் உடுவில்.

## கயிறு இழுத்தல்

முதலாம் இடம் புன்னலைக் கட்டுவன் குழு, இரண்டாம் இடம் இணுவில் குழு.

## கிரிக்கெட்

முதலாம் இடம் ஏழாலை மேற்கு குழு, இரண்டாம் இடம் கந்தரோடை குழு.

## கரபந்தாட்டம்

முதலாம் இடம் உடுவில் வடக்கு குழு, இரண்டாம் இடம் இணுவில் குழு,

## தாச்சிப் போட்டி

முதலாம் இடம் சங்குவேலி குழு, இரண்டாம் இடம் உடுவில் வடக்கு குழு.

## மாட்டு வண்டிச் சவாரி

சி பிரிவு - 1. சி. சிறீதரன் வட்டுக்கோட்டை, இ அகிரதன் பண்டத்தரிப்பு, சு. கந்தையா அளவெட்டி, 'பி' பிரிவு - 1 இ. திருச்செல்வம் மாரிசன்கூடல், வே. கனகரட்ணம் உடுவில், ந. தில்லைராசா வட்டுக்கோட்டை, 'ஏ' பிரிவு -1 செ. இளையதம்பி கரவெட்டி, இ. அகிரதன் பண்டத்தரிப்பு, ச. பிரதீபன் சங்குவேலி, க. விக்கினேஸ்வரன் உடுவில். (109)

# வருடாந்த கூட்டம்

(மட்டக்களப்பு)

அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் சங்கத்தின் அங்குரார்ப்பணதினமான மே மாதம் 21-ம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கிறது

கடந்த 1983 யூலை கலவரத்தை அடுத்து தொழிற்சங்கங்கள் மீது விதிக்கப்பட்டிருந்த தடை அண்மையில் நீக்கப்பட்டதை அடுத்து இப்போது அரசாங்க எழுது வினைஞர் சங்கம் இயங்கிவருவதுகுறிப்பிடத்தக்கது.

# கொடிகாமம் சந்தையில் 17 புதிய கடைகள்!

(தென்மராட்சி)

பல வருடங்கள் இழுபறியாக இருந்துவந்த கொடிகாமச் சந்தைக்கடை வேலைகள் கச்சாய் அபிவிருத்திச் சபையின் முயற்சியால் இப்போது பூர்த்தியடைந்துள்ளன.

தற்போது 17 கடைகள் கட்டப்பட்டுள்ளன. இவை ஒவ்வொன்றும் 17 பேருக்கு வியாபாரம் செய்வதற்காக வழங்கப்பட்டன.

75,000 ரூபாவிலிருந்து ஒரு லட்சத்து 50 ஆயிரம் வரை பாவனையாளர் விண்ணப்பித்துள்ளனர். கூடுதலாகவிண்ணப்பித்த 32 பாவனையாளருள் கூடிய தொகையில் விண்ணப்பித்த மிகக்கூடிய 17 பாவனையாளருக்கு கடைகள் வழங்கப்பட்டு கதவுகள் அமைக்கும் வேலை நடைபெறுகிறது. (81)

# வெடி போட்டு மீன் பிடிக்கத் தடை

(யாழ்ப்பாணம்)

கடலில் வெடி போட்டு மீன் பிடிப்பதை தமிழீழ விடுதலைப் புலிகள் தடுத்துள்ளனர்.

அடுத்த மாதம் முதலாம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் இந்நடைமுறையை கடைப்பிடிக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதை மீறுவோர் மீது நடவடிக்கை எடுககப்படுமென்று விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது. (152)

# மாதகலில் கரபந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

'அன்ரனி அரியதாஸ்' வெற்றிக்கேடயத்துச்கான மாதகல் கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தினல் கரபந்தாட்ட நொக்கவுட் போட்டி நடைபெறவுள்ளது.

'ஓவர்-கேம்' முறையிலான இக் கரபந்தாட்டப்போட்டியில் நான்குபேர் பங்குபற்றும் போட்டியொன்றும், ஆறுபேர் பங்குபற்றும் போட்டியும் நடைபெறவுள்ளன.

இப்போட்டிக்கான சகலஏற்பாடுகளையும் மேற்படி ஒன்றியத்தின் பிரதிநிதி மா. ஜெருட் மேற்கொண்டு வருகின்றார். (வி)

0 0

(பண்டத்தரிப்பு)

மாதகல் பங்கு கத்தோலிக்க இளைஞர் ஒன்றியம் மரணித்த செல்வன் அன்ரனி அரியதாஸின் ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்திற்காக நான்குபேர் கொண்டதும், ஆறு பேர் கொண்டதுமான பழைய முறையிலான கரபந்தாட்ட சுற்றுப்போட்டியை மாதகலில் நடாத்தவுள்ளது.

இப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் விளையாட்டுக்கழகங்கள் மேற்படி இளைஞர் ஒன்றியத்துடன் இம்மாதம் 30ம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. (72)

# முடிச்சு மாறிகள் நடமாட்டம்

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்டத்திலுள்ள பிரபல சந்தைகளில் ஒன்றுன பண்டத்தரிப்புச் சந்தையில் முடிச்சு மாறிகளின் நடமாட்டம் அதிகரித்து வருவதாக புகார் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வாரம் இங்கு கைலாசபிள்ளை என்ற சிறு வியாபாரி பொருட்கள் வாங்க வந்தபோது அவரின் சேர்ட் பாக்கற்றிலிருந்த ஆயிரத்து இருநூறு ரூபா பேர்ஸ்சுடன் காணமற் போய்விட்டது.

வாழைக்குலை விற்றுவிட்டு அப்பணத்தை சேட் பாக்கற்றில் வைத்திருந்த அளவெட்டி வாசிஒருவரின் பணமும் முடிச்சு மாறிகளின் கைக்கு மாறிவிட்டது. இதுபற்றி சந்தைக்கு வருபவர்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்று கருத்துத் தெரிவிக்கப்படுகிறது. (72)

# சாரணர் பயிற்சி

(தென்மராட்சி)

கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலய சாரணர் மாணவர்கள் வித்தியாலயத்தில் மூன்று நாட்கள் தங்கி (வெள்ளி சனி ஞாயிறு) கூடாரம் அமைத்து சாரண பயிற்சி பெற்றனர்.

60 சாரணர்கள் ஒவ்வொன்றும் 12 சாரணர்கொண்ட 5 அணிகளாக வகுக்கப்பட்டு பயிற்சி பெற்றனர். சாரணர் போதனாசிரியர் திரு. சபேசன் பயிற்சி அளித்தார். (81)

# நோன்பு தொழுகை நேர அட்டவணை

| | |
|---|---|
| ஸஹர் முடிவு | — 4. 25 |
| சுபஹ் | — 4- 40 |
| உதயம் | — 6-00 |
| லுஹர் | — 12-20 |
| அஸர் | — 3-22 |
| மஃரிப் | — 6-20 |
| இஷா | — 7-40 |

# "வீரத்தையும், மானத்தையும் வெளிக்கொணர்வது கலை"

(யாழ்ப்பாணம்)

தமிழ் ஈழவிடுதலைப்புலிகளின் முக்யஸ்தர்களின் ஒருவரான கிட்டு வீட்டுக்காவலில் இருக்கும்போது கட்டுக்காவலை மீறிகிட்டுவை பார்க்கச்சென்றவர் திரு. தேனிசை செல்லப்பா அது மாத்திரமல்ல காவல் காத்தவர்களுக்கு ஒரு வீரத் தளபதியை சந்திக்கப் போகின்றேன் என்றும் இறுமாப்போடு சொன்னவர் அவர்:

இவ்வாறு யாழ் முற்றவெளி மைதானத்தில் நடைபெற்ற தேனிசை செல்லப்பாவின் இசை நிகழ்ச்சியின்போது விடுதலைப்புலிகளின் யாழ்மாவட்ட தளபதி பானு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில்; தேனிசை செல்லப்பாவின் பாடல்களில் எமது தலைவர் பிரபாகரன் அதிக ஈடுபாடு கொண்டவர் என்றும் கூறினார்.

விடுதலைப்புலிகள் கலாச்சாரப்பிரிவுப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை பேசுகையில்: ''யாழ்ப்பாணத்தில் உள்ள பதினைந்து வயதுள்ள வாலிபன் இப்போதுதான் யாழ் முற்றவெளியைக்காண முடிகிறது. யாழ்ப்பாணத்தில் எமது நிகழ்ச்சியொன்றை ஒலிப்பதிவு செய்யமுன் வந்த போது இங்குள்ள கலைஞர் ஒருவர் மறுப்புத் தெரிவித்தார். அதே கலைஞர் கதிர்காமத்தில் 'கம் உதாவ' நிகழ்ச்சியில் பங்கு பற்றினார். இப்படியானகலைஞர்களால் எம் சமுகத்துக்கு என்னபிரயோசனம் என்றார்.

விடுதலைப்புலிகளின் யாழ் மாவட்டகலா சாரப்பிரிவினர் தலைவி சீதா பேசுகையில், ''வீரத்தையும் மானத்தையும் வெளிக்கொணர்வது கலை. இந்தக் கலை எம்மண்ணிலிருந்து அழியப்போகின்றது. இதற்குக் எம்மண்ணில் அந்நியத்தலையீடுகளும். உற்சாகமின்மையுமே காரணம். ஆயுத மூலமல்ல, கலை மூலம் ஒடுக்கப்பட்ட மக்களின் புரட்சிகள் உலக அரங்கில் வெடித்திருக்கின்றது'' என்றார். (152)

# நெடுந்தீவு துறைமுகம்

## விரைவில் அபிவிருத்தி செய்யப்படும்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவுத் துறைமுகம் வெகுவிரைவில் அபிவிருத்தி செய்யப்பட இருப்பதாகத் தெரியவருகிறது.

நெடுந்தீவுத் துறைமுகத்தை அண்டியுள்ள பகுதியில் கற்களும், சேறும் காணப்படுவதால், இவற்றை அள்ளுவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை வீதி அபிவிருத்தி அதிகார சபை எடுத்துள்ளதாகத் தெரிகிறது.

வீதி அபிவிருத்தி அதிகாரச் சபையிடம் சேறு அள்ளுவதற்கான இயந்திரம் இல்லாத காரணத்தால், மனித வலுவைப் பாவித்து, சேறு, கற்கள் அள்ளுவதற்கான முயற்சிகளில் ஈடுபடவுள்ளதாகத் தெரியவருகிறது.

இப்பொழுது நெடுந்தீவுக்கு வலம்புரி என்னும் புதிய மோட்டார்ப் படகு போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டுள்ளது. இது நெடுந்தீவுத் துறைமுகக் கரையை அடைவதற்கு மிகவும் கஷ்டமாக இருப்பதாகவும், அதன் காரணமாகச் சேறு அள்ளும் வேலை வெகு விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது. (153)

# "பாகிஸ்தானுடன் போரிட நேரிட்டால் அதனை சமாளிக்க தயாராக இருக்கிறோம்"

## வி. பி. சிங்

(புதுடில்லி)

"பாகிஸ்தானுடன் போரிட நேரிட்டால் அதனைச்சமாளிக்க நாடு தயாராக இருக்கிறது" என்று இந்தியப் பிரதமர் திரு. வி. பி. சிங் தெரிவித்துள்ளார்.

பத்திரிகையாளர் மத்தியில் பேசுகையிலே அவர் இவ்வாறு கூறினார்.

காஷ்மீர் பிரச்சனையில் பாகிஸ்தானுடன் போர் ஏற்படுமென்று நான் நினைக்கவில்லை என்றும், இந்தப் பிரச்சனையில் அமெரிக்காவின் மனப்போக்கில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்றும் தெரிவித்தார்.

காஷ்மீர் பிரச்சனையைத் தீர்ப்பதில் இந்திரா காங்கிரஸ் கட்சியைத் தவிர எல்லா அரசியல் கட்சிகளும் ஒத்துழைப்புத் தருகின்றன என்றும் அவர் கூறினார்.

பாகிஸ்தானின் எல்லையில் இப்போது ஏற்பட்டுள்ள இந்தப் பதற்றமான சூழ்நிலையில் உள்நாட்டு அமைதியையும், நல்லிணக்கத்தையும் பராமரிக்குமாறு மக்களை அவர் கேட்டுக்கொண்டார்.

வடபகுதியில்—

# இறால்வளர்ப்பை ஊக்குவிக்க

## கடற்றொழில் அமைச்சு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வட பகுதியில் இறால் வளர்ப்பை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளைக் கடற்றொழில் விரிவாக்க அமைச்சு மேற்கொண்டுள்ளது.

இத்திட்டம், தேசிய இளைஞர் சேவை மன்றத்துடன் இணைந்து செயற்படுத்தப்படும்.

காரைநகர் மாப்பாணஊரி என்னுமிடத்தில் முதலாவதாக இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அரியாலை, சுண்டிக்குளம், தொண்டைமனாறு ஆகிய பகுதிகளில் விரைவில் இறால் பண்ணைகள் ஆரம்பிக்கப்பட உள்ளன.

வடபகுதியில் இறால் வளர்ப்புத் திட்டம், மேற்படி அமைச்சினால் 1984–ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தாயினும், வடபகுதியில் நிலவிய சூழ்நிலையால் இத்திட்டம் செயற்படாமல் இருந்தது குறிப்பிடத்தக்கது.

தினமும் 10,000 ரூபா பெறுமதியான இறால் வடபகுதியிலிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்காகச் சம்பந்தப்பட்ட நிறுவனங்களினால் கொள்முதல் செய்யப்பட்டுவருகிறது.

### யாழ்ப்பாணம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் அவர் தெரிவிக்கையில் யாழ்.மாவட்டத்திற்கான புனரமைப்பு நடவடிக்கைகள் குறித்து ஆராயப்பட்டு வருகிறது. விரைவில் இது தொடர்பான வேலைகள் ஆரம்பமாகுமென்றும் கூறியுள்ளார். (சி)

### பிரிட்டிஷ்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

குளியிலுள்ள ஜெயப்பூர் செயற்கைக் கால் தயாரிக்கும் தொழிற்சாலையைப் பார்வையிட்டார். அத்துடன் யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி அதிபரையும் சந்தித்தார்.

சென். ஜோன்ஸ் கல்லூரி ஆய்வுக்கூடக் கட்டிடத்தைப் பார்வையிட்டதுடன் தேவையான தளபாடங்களைத் தருவதாகவும் உறுதியளித்தார்.

பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கும், இலங்கை அரசாங்கத்திற்கும் இடையேயுள்ள உதவித் திட்டத்தின் கீழ் யாழ். போதனா வைத்தியசாலைக்கு இவ்வருட இறுதிக்குள் எக்ஸ்றேக் கருவி, சத்திரசிகிச்சைச் சாதனங்களுட்பட மற்றும் பல்வேறு வைத்திய சாதனங்கள் வழங்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

யாழ். மக்கள் சிநேகபூர்வ மனப்பான்மையுள்ள மக்கள் என்றும் அவர் தெரிவித்தார். (153)

### 70 ஆயிரம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

உடைத்து உட்புகுந்த கொள்ளைக் கோஷ்டியினர் அங்கிருந்த நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இதேநேரம் உச்சில் அம்மன் ஆலயத்தினுள் புகுந்த மற்றொரு கொள்ளைக் கோஷ்டி அங்கு எவ்வித பெறுமதிவாய்ந்த பொருட்களும் இல்லாமையால் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றுள்ளதென்றும், பூதலைக்குழி முருகன் ஆலயத்திற்குள் புகுந்த திருடர் கோஷ்டியொன்று அங்குள்ள சில பொருட்களைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (55)

### பயிலுநர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தாமதம் ஏற்பட்டது என்று திரு. மெண்டிஸ் மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவின் பிரத்தியேகமான தலையீட்டை அடுத்தே இப்பதவி நியமனங்கள் துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் திரு. மெண்டிஸ் கூறினார்.

பயிலுநர் ஆசிரியர் தெரிவில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதான புகார்க் கடிதங்கள் சம்பந்தமாகக் கல்விச் சேவைக் கமிஷன் விசாரணை நடாத்தவேண்டுமெனக் கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி ஆர். புலேந்திரன் கோரிக்கை விடுத்ததை யடுத்து, ஆணைக்குழு தக்க நடவடிக்கை எடுத்து விசாரணை நடாத்திப் பலவற்றுக்குத் தீர்வு ஏற்கனவே காணப்பட்டுவிட்டது என்றும் திரு. மெண்டிஸ் மேலும் தெரிவித்தார். (அ)

### மனிதாபிமானத்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இவர்களுக்கு உணவு, உடை, உறைவிடம் கொடுத்து நன்கு பராமரிக்கப்பட்டது.

இவ்வைபவத்துக்கு பேசாலை கிராமியப் பொறுப்பாளர் திரு. காசீம், மன்னார் அரச அதிபர் திரு. ஏ. சி. செபநாயகம், தலைமைப்பீட உதவி அரச அதிபர் திரு. எஸ். எம். குரூஸ், பேசாலை வடக்கு கிராமசேவை அலுவலர் திரு. எஸ். கொன்சிறெவ்வல் ஆகியோர் சமுகமளித்திருந்தனர்.

திரு. லக்ஷ்மன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:–

"நீங்கள் இங்குவந்து இவர்களின் தொழிலுக்குப் பாதிப்பு ஏற்படுத்திச் செல்வது சரியல்ல. இன்று நாங்கள் உங்கள் அனைவரையும் மனிதாபிமானத்துடன் விடுதலை செய்கிறோம். இனிமேல் இப்பகுதிக்குத் தொழிலுக்கு வரக்கூடாது. ஏனையவர்களுக்கும் இதனைக் கூறி இங்கு வருவதை நிறுத்திக்கொள்வது நல்லது".

மன்னார் அரச அதிபர் பேசுகையில், நாட்டில் நிலப்பரப்புக்கு எல்லை யுள்ளதைப்போல கடலிலும் எல்லையுண்டு என்றும், நீங்கள் வருவதால் இப்பகுதி மக்கள் பல கஷ்டங்களை எதிர்நோக்குகின்றார்கள் என்றும், எனவே இனிமேல் வருவதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள் எனவும் கூறினார்.

தலைமைப்பீட உதவி அரச அதிபர் பேசுகையில், "நீங்கள் இவ்விதம் நடந்துகொண்டும் உங்களுக்கு எவ்வித பிரச்சனையுமில்லாது இன்று விடுவிக்கப்படுவது விடுதலைப் புலிகளின் இரக்க சிந்தையையே எடுத்துக்காட்டுகிறது" என்றார்.

புலிகளின் பேசாலைப்பொறுப்பாளர் திரு. காசீம் அவர்களை இந்தியாவுக்கு வழியனுப்பி வைத்தார். (85)

### மோட்டார்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வசந்தராசா என்ற ஒன்பது வயதுச்சிறுவன் காயமடைந்துள்ளார்.

யாழ். ஈச்சமோட்டையில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் முத்துராசா ரூபன் (17 வயது) என்பறர் காயமடைந்துள்ளார்.

நல்லூர் முத்திரைச் சந்தியில் இடம் பெற்ற விபத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நவீனன் (வயது 20) என்பவர் படுகாயமடைந்துள்ளார்.

வரணியில் இடம்பெற்ற விபத்தில் தாவளை இயற்றாலையைச் சேர்ந்த சின்னத்தம்பி செல்வராசா (18 வயது) என்பவர் காயமடைந்தார்.

ஓட்டுமடத்தில் இடம்பெற்ற விபத்தில் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த கே. சின்னத்துரை (வயது 65) என்பவர் காயமடைந்துள்ளார்.

இதேவேளை வவுனிக்குளம் பாண்டியன் குளத்தில் இடம்பெற்ற டிரக்டர் விபத்தில் செல்லையா அழகதுரை (45 வயது) என்பர் காயமடைந்துள்ளார்.

காயமடைந்த அனைவரும் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். (56)

## பனையிலிருந்து விழுந்து மரணம்

(யாழ்ப்பாணம்)

பனைமரத்தில் கள்ளிறக்க ஏறிய சீவல் தொழிலாளி ஒருவர் அம்மரத்திலிருந்து விழுந்து மரணமானார்.

நேற்று முன் தினம் இயக்கச்சியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் பளை-புலோப்பளை மேற்கைச் சேர்ந்த கந்தையா ஞானசீலன் என்ற 29 வயதுக் குடும்பஸ்தரே மரணமானவராவார். (56)

### தேசிய

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சனைகளுக்குத் தீர்வு காணமுடியாது. நாட்டின் சகல பிரதிநிதிகளின் ஒருமித்த கருத்து ஏற்படும் விதத்தில் பகிரங்கமாகவே பேச்சுவார்த்தை நடத்துவதன் மூலம், சகல பிரச்சனைகளுக்கும் நிரந்தரமான தீர்வு காணமுடியும்" என்றும் ஜனாதிபதி மேலும் வலியுத்தியுள்ளார்.

"சர்வ கட்சி மாநாடு, இந்த உயரிய நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டே உருவாக்கப்பட்டது." (அ)

## நடேஸ்வரா கல்லூரி புனரமைக்கு 26 லட்ச ரூபா

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரிப் புனரமைப்புக்கு 26 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகக் கல்லூரி அதிபர் திரு. கே. இராசதுரை 'ஈழநாடு'வுக்குத் தெரிவித்தார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் கிடைக்கவிருக்கும் இத்தொகைக்குப் புதிய விஞ்ஞான ஆய்வுக்கூடமும், நூல்நிலையமும் அமைக்கப்பட உள்ளது.

புதிய விஞ்ஞான ஆய்வுக் கூடத்திற்கு 1 லட்சம் ரூபாவும், நூலக மாடிக் கட்டடத்திற்கு 8 லட்சம் ரூபாவும் செலவிடப்பட இருப்பதாகக் கூறிய அதிபர் திரு.கே.இராசதுரை, இதுவரை நடேஸ்வராக் கல்லூரியின் புனரமைப்பு வேலைகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க இதுவே மிகப் பெரிய தொகையாகும் என்று குறிப்பிட்டார்.

யாழ். மாவட்டத்துக்கு

## 8 கோடி ரூபாவை புனரமைப்பு நிதியாக வழங்குமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

ஒன்றிணைக்கப்பட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு நிவாரணத் திட்டத்தின் கீழ் எட்டுக் கோடி 30 லட்சம் ரூபாவை யாழ். மாவட்டத்திற்கு உடனடியாக வழங்குமாறு யாழ். அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட், வடக்கு-கிழக்கு மாகாணசபைப் பிரதம செயலாளரைக் கேட்டுள்ளதாகத் தெரியவருகிறது

பாதிக்கப்பட்ட விவசாய, கடற்றொழில், சுயதொழில் மக்களுக்கு உற்பத்தித் திறன் முயற்சி நன்கொடை வழங்குவதற்கு நான்கு கோடி ரூபா தேவைப்படுகிறது. அத்துடன் உள்ளூராட்சிச் சபைகளின் புனரமைப்பு வேலை நிதிக் கொடுப்பனவுக்கு நான்கு கோடி முப்பது லட்சம் ரூபா தேவைப்படுகிறது.

இதன்படி மொத்தம் எட்டுக் கோடி 30 லட்சம் ரூபா நிதிக் கொடுப்பனவுக்காகத்தேவைப்படுகிறது.

உள்ளூராட்சிச் சபை புனரமைப்பு வேலைத்திட்டத்திற்கு ஏற்கனவே ஐம்பது லட்சம் ரூபா நிதி கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

எமது
நேற்றைய வெளியீடுகள்

(1) பானுச்சந்தர் ★ கனகா ★ செந்தில்
முதலாளியம்மா
(ஒறிஜினல்)

(2) நாகர்ஜுன் ★ அமலா
பாசத்தை திருடாதே

(3) ★ ஜெமினி ★ தேவிகா ★ தங்கவேலு
வாழ்க்கைப் படகு

(4) முரளி ★ சிதா ★ செந்தில்
வெற்றி மாலே
(ஒறிஜினல்)

KVC குணம்
வீடியோ சென்ரர்
42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990-ம் ஆண்டு சித்திரை மாதம் 25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.